30.05.15

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**திராட்சை சாகுபடிக்கு ரூ.50 ஆயிரம் மானியம்**

தேனி மாவட்டத்தில் திராட்சை சாகுபடியில் ஈடுபடும் விவசாயிகளுக்கு தோட்டக் கலைத் துறை மூலம் ஏக்கர் ஒன்றுக்கு ரூ.50 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது.

இது குறித்து மாவட்ட தோட்டக் கலைத் துறை அலுவலர்கள் கூறியது: திராட்சை சாகுபடியை அதிகரிப்பதற்காக, தோட்டக்கலைத் துறை மூலம் ஏக்கர் ஒன்றுக்கு ரூ.50 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது. திராட்சை கொடி நடவு செய்வதற்கு முதலாண்டில் ரூ.30 ஆயிரம், பராமரிப்பு செலவுக்கு 2 மற்றும் 3 ஆண்டுகளில் தலா ரூ.10 ஆயிரம் வீதம் மானியம் வழங்கப்படும்.

திசு வாழை சாகுபடிக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.30 ஆயிரத்து 750, கொய்யா அடர் நடவுக்கு ரூ.17 ஆயிரத்து 592, பப்பாளிக்கு ரூ.23 ஆயிரத்து 100, மா சாதாரண நடவுக்கு ரூ.7,650, அடர் நடவுக்கு ரூ.9,800, எலுமிச்சைக்கு ரூ.12 ஆயிரம் மானியம் வழங்கப்படும்.

விவசாயிகள் சம்மந்தப்பட்ட பகுதிகளில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குநர்களை தொடர்பு கொண்டு மானிய உதவி பெற விண்ணப்பிக்கலாம் என்றனர்.

**மஞ்சளாறு அணையிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு**

தமிழக அரசு உத்தரவின்படி மஞ்சளாறு அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறக்கும் நிகழ்ச்சி வெள்ளிக்கிழமை நடைபெற்றது. தேனி தொகுதி எம்.பி ஆர்.பார்த்திபன் மலர் தூவி பாசனத்திற்கு தண்ணீரை திறந்துவைத்தார். பெரியகுளம் அருகே உள்ள மஞ்சளாறு அணையின் மொத்த உயரம் 57 அடி. இதில் 51.80 அடி

அளவிற்கு தண்ணீர் உள்ளது. இந் நிலையில் பழைய ஆயக்கட்டு பகுதிக்கு மட்டும் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இத் தண்ணீர் மூலம் தேனி மாவட்டத்தில் பெரியகுளம் தாலுகாவில் உள்ள தேவதானப்பட்டி, கெங்குவார்பட்டி, ஜி.கல்லுப்பட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 314 ஏக்கர் நிலங்களும், திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை தாலுகா பகுதியில் உள்ள வத்தலகுண்டு, கணவாய்பட்டி, குன்னுவராயன்கோட்டை, சிவஞானபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 583 ஏக்கர் நிலங்களும் உள்பட மொத்தம் 897 ஏக்கர் நிலங்கள் பாசனவசதி பெறுகின்றன.

அணையில் இருந்து 20 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. மேலும் வரும் ஜூலை மாதம் 31-ஆம் தேதி வரை 64 நாள்களுக்கு தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இத் தண்ணீர் திறப்பு நிகழ்ச்சியில் பெரியகுளம் தொகுதி எம்.எல்.ஏ. லாசர், பெரியகுளம் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் எம்.செல்லமுத்து, வருவாய் கோட்டாட்சியர் எஸ்.ஜானகி, வட்டாட்சியர் ஆர்.ரமேஷ். பொதுப்பணித்துறை செயற் பொறியாளர் எம்.சேகர், உதவி செயற் பொறியாளர் செல்வம், உதவி பொறியாளர்கள் எம்.சென்ராம், ஆர்.கண்ணன், ஏ.சேகரன், ஜெயமங்கலம் கே.கண்ணன் உள்பட அதிமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

**திருத்தணியில் ஆலங்கட்டி மழை**

திருத்தணியில் வெள்ளிக்கிழமை பலத்த இடியுடன் இரண்டு மணி நேரம் ஆலங்கட்டி மழை பெய்தது. வெள்ளிக்கிழமையுடன் கத்தரி வெயில் முடிவடைந்த நிலையில் திருத்தணியில் மாலை 3 மணியளவில் திடீரென கருமேகங்கள் சூழ்ந்தன. சிறிது நேரத்தில் ஆலங்கட்டியுடன் பலத்த மழை பெய்தது. 4 மணிக்கு தொடங்கிய மழை 6 மணி வரை நீடித்தது. இதனால் சாலைகளில் வெள்ளம் ஆறாகப் பெருக்கெடுத்து ஓடியது. அனுமந்தாபுரம் பகுதியில் மரம் வேரோடு சாய்ந்து அருகில் இருந்த மின்மாற்றி மேல் விழுந்தது. தகவலறிந்து மின் வாரியத்தினர்

உடனடியாக மின்சாரம் துண்டித்தனர். அதைத்தொடர்ந்து நகர் முழுவதும் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. அதேபோல் ஆலமரம் தெருவில் மரம் ஒன்று வேரோடு சாய்ந்து வீட்டின் மேல் விழுந்தது. திருத்தணி முருகன் கோயிலில் பின்புறம் ரூ. 15 லட்சம் செலவில் "ஓம் முருகா' என பெயர் பலகை ஒன்று கடந்த சில மாதங்களுக்கு முன்பு அமைக்கப்பட்டது. வெள்ளிக்கிழமை பெய்த மழையால் அது பின்புறமாகச் சாய்ந்தது. இதில் பக்தர்கள் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.

**ராஜபாளையத்தில் பழங்கள் விற்பனை அதிகரிப்பு**

ராஜபாளையத்தில் வெயில் நூறு டிகிரிக்கு மேல் வாட்டி எடுத்து வருவதால் பழங்கள் விற்பனை அதிகரித்துள்ளது. ராஜபாளையத்திற்கு மேற்கே மலைப்பகுதியில் கடந்த சில நாள்களுக்கு முன் மழை பெய்ததால் அய்யனார் கோவில் ஆற்றில் பெருக்கெடுத்தது.

சில நாள்களுக்கு முன்புவரை வெயிலே இல்லாமல் குளிர்ந்த காற்றுடன் சாரல் துளிகள் பெய்து இதமான காலநிலை நிலவியது. இந்த நிலை கடந்த பத்து நாள்களாக மாறி மீண்டும் வெயில் வாட்டி எடுத்துவருகிறது. பகலில் வெயிலும் இரவும் கடுமையான புழுக்கமும் நிலவுகிறது.

இதனால் பழங்கள் விற்பனை அதிகரித்துள்ளது. தர்பூசணி, இளநீர், செவ்விளநீர், கரும்புசாறு, பதநீர், பனை நுங்கு, சாத்துக்குடி, திராட்சை, மாதுளை போன்றவை அதிகம் விற்பனையாகிறது.

மேலும் பாரம்பரிய பயறு வகைகளான கேழ்வரகு, கம்பு போன்றவற்றைப் பயன்படுத்தி உணவுப் பண்டங்கள் தயாரித்து சாலையோரங்களில் தள்ளுவண்டிகளில் விற்கின்றனர். இவையும் பொதுமக்களிடம் நல்லவரவேற்பை பெற்று அதிகம் விற்பனையாகிறது.

**கமுதி அருகே வெண்டைக்காய் தோட்டத்தில் அதிகாரிகள் ஆய்வு**

ராமநாதபுரம் மாவட்டம், கமுதி அருகே கோரைப்பள்ளம் கிராமத்தில் ஒரு ஏக்கர் பரப்பளவில் உருவாக்கப்பட்ட வெண்டைக்காய் தோட்டத்தை, வேளாண்மைத் துறை அதிகாரிகள் வியாழக்கிழமை ஆய்வு செய்தனர்.

கோரைப்பள்ளம் கிராமத்தைச் சேர்ந்த ராமர் என்ற விவசாயி, ஒரு ஏக்கரில் வெண்டைக்காய் தோட்டம் அமைத்துள்ளார். தேசிய தோட்டக்கலை இயக்ககத்தின் சார்பில், இந்த விவசாயிக்கு ரூ. 8 ஆயிரம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் பெய்த மழையின் காரணமாக, இத்தோட்டத்தில் எந்தவித பாதிப்புகளும் ஏற்படவில்லை என்பதை அறிந்த தோட்டக்கலைத் துறைதுணை இயக்குநர் வி. கெங்காதரன், உதவி இயக்குநர்கள் பி. இளங்கோவன், ஜெ. ராஜேந்திரன் ஆகியோர் நேரில் சென்று தோட்டத்தை ஆய்வு செய்தனர். இது குறித்து, விவசாயி கே.ராமர் கூறியது: ஒரு ஏக்கரில் ரூ. 15 ஆயிரம் செலவில் பீஜோ என்ற வெண்டைக்காய் பயிரிட்டுள்ளேன். அரசு மானியமாக ரூ. 8 ஆயிரம் மற்றும் விதைகள், உரம், மருந்து ஆகியனவும் இலவசமாக வழங்கப்பட்டன. பொதுவாக, வெண்டைக்காய் 90 நாள் பயிராகும். பயிரிட்ட 45 ஆம் நாள் முதல் தொடர்ந்து 50 நாள்களுக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் வெண்டைக்காய் பறித்து விற்பனை செய்கிறேன்.

ஒரு நாளைக்கு ரூ. 1000 வீதம் ஒரு மாதத்துக்கு ரூ. 30 ஆயிரம் வரை வருமானம் கிடைக்கிறது. அண்மையில் மழை பெய்ததால், வெண்டைக்காய் செடிகளில் பரவும் மஞ்சள் தேமல் நோய் எதுவும் வரவில்லை. 3 நாள்களுக்கு ஒரு முறை தண்ணீர் விட்டால் போதுமானது.

விரைவில் அரசு உதவியுடன் சொட்டுநீர்ப் பாசனம் மூலம் தண்ணீர் விடவும் முடிவு செய்துள்ளேன். 90 நாள்களுக்கு பிறகு, தற்போது வளர்ந்துள்ள செடிகளை அப்படியே அதே இடத்தில் உரமாக்கி விட்டு, மீண்டும் வெண்டைக்காய் விதைகளை பயிரிட முடிவு செய்துள்ளேன் என்றும் அவர் தெரிவித்தார்.

**குருமிளகுப் பொடி குண்டுகளைப் பயன்படுத்தி வன விலங்குகளை விரட்டப் பயிற்சி**

வனவிலங்கு - மனித மோதல்களால் ஏற்படும் உயிரிழப்புக்களைத் தடுக்கும் வகையில், குருமிளகுப் பொடி குண்டுகளை பயன்படுத்தி வன விலங்குகளை விரட்டுவது குறித்த பயிற்சி முகாம் மேட்டுப்பாளையத்தில் வெள்ளிக் கிழமை நடைபெற்றது. கோவை, மேட்டுப்பாளையம், வால்பாறை மற்றும் நீலகிரி மாவட்டத்திற்கு உள்பட்ட கோத்தகிரி, குன்னூர், கூடலூர் பகுதிகளில் கடந்த சில மாதங்களாக வன விலங்குகள் மனிதர்கள் வாழும் பகுதிகளில் நுழைந்து பயிர் மற்றும் உயிர்ச் சேதங்களை ஏற்படுத்தி வருகின்றன.

கோவை மாவட்டத்தில் யானைகளாலும், நீலகிரி மாவட்டத்தில் கரடி, புலி, சிறுத்தைகளாலும் பொதுமக்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டு வருகிறது. இந்நிலையில், வனவிலங்கு - மனித மோதல்களைத் தடுப்பது, பாதிப்பின்றி வன விலங்குகளை விரட்டுவது குறித்த பயிற்சி முகாம் மேட்டுப்பாளையம், கோத்தகிரி சாலையிலுள்ள வனத்துறை மரக்கிடங்கு வளாகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இம்முகாமிற்கு, மண்டல வனப் பாதுகாவலர் அன்வர்தீன் தலைமை வகித்தார். மேட் டுப்பாளையம் வனச்சரகர் நசீர் வரவேற்றார். இம்முகாமில், வனப் பகுதியில் காடுகளின் பரப்பளவை அதிகப்படுத்துவது, நீர் நிலைகளைப் பாதுகாப்பதன் மூலமாக வனவிலங்குகள் காடுகளில் இருந்து வெளியேறுவதைத் தடுப்பது, அவற்றால் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் நிலை உருவாகும்போது, விலங்குகளை பாதிப்பின்றி அப்புறப்படுத்துவது

குறித்தும், இந்திய அளவில் முதல் முறையாக பெப்பர் பொடி (குருமிளகுப் பொடி) மூலமாக தயாரிக்கப்பட்ட குண்டுகளைப் பயன்படுத்தி துப்பாக்கியால் சுட்டு, வன விலங்குகளை விரட்டுவது குறித்து மாவட்ட வன அதிகாரி செந்தில்குமார், வனத்துறை கால்நடை மருத்துவர் மனோகரன் ஆகியோர் பயிற்சியளித்தனர். இதில் கோவை, நீலகிரி மாவட்டங்களைச் சேர்ந்த வனச் சரகர்களும், வனவர்களும் பங்கேற்றனர்.

இந்தப் பயிற்சி முகாமைத் தொடர்ந்து, வனத்தை விட்டு வெளியேறும் வன விலங்குகள் மீது பெப்பர் குண்டுகளைப் பயன்படுத்தி மீண்டும் அவைகளை காட்டிற்குள் விரட்டும் திட்டம் விரைவில் செயல்படுத்தப்பட உள்ளதாகவும் வனத்துறையினர் தெரிவித்தனர்.

**தாராபுரம் பகுதியில் விவசாயப் பணிகள் தீவிரம்**

தாராபுரம், அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பெய்த கோடை மழையைத் தொடர்ந்து, விவசாயப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

தாராபுரம் பகுதியில் கடந்த 10 நாளுக்கு முன் தொடர்ந்து மழை பெய்தது.

இதன் காரணமாக அமராவதி பழைய மற்றும் புதிய பாசனப் பகுதி கால்வாய்க்கால்களில் நீர் பெருக்கெடுத்து ஓடியது. கிணறுகளில் நீர் மட்டம் அதிகரித்துள்ளது. கோடை மழை தேவைக்கு அதிகமாகவே பெய்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். இந்நிலையில் விவசாயிகள், வெங்காயம், எள், சோளம் உள்ளிட்ட பல்வேறு பயிர்களை சாகுபடி செய்யும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். தாராபுரம், அலங்கியம், செலாம்பாளையம், தளவாய்பட்டிணம், சென்னாக்கல்பாளையம் போன்ற பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டிருந்த கரும்புப் பயிர், ஈரம் காரணமாக வெட்டப்படாமல் இருந்தது. தற்போது, வெயில் காரணமாக கரும்புப் பயிர் ஈரம் நீங்கிய நிலையில் கரும்பை வெட்டி, அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு அனுப்பும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

விவசாயப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

## ரூ. 10 லட்சத்துக்கு சூரியகாந்தி விதைகள் ஏலம்

வெள்ளக்கோவில் மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ. 10 லட்சம் மதிப்பிலான சூரியகாந்தி விதைகள் வியாழக்கிழமை ஏலத்தில் விட்டடப்பட்டன. இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் வாரந்தோறும் வியாழக்கிழமை சூரியகாந்தி விதைகள் ஏலம் நடைபெறுவது வழக்கம். மே 28-ஆம் தேதி நடைபெற்ற ஏலத்தில் உள்ளூர் விவசாயிகளும், வெளி மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளும் சூரியகாந்தி விதைகளை விற்பனைக்காகக் கொண்டு வந்திருந்தனர்.

ஏலத்துக்கு 675 மூட்டைகளில் மொத்தம் 32,000 கிலோ விதைகள் கொண்டுவரப்பட்டிருந்தன. அதிகபட்சம் கிலோ ரூ. 35.65-க்கும், குறைந்தபட்சமாக கிலோ ரூ. 31.05-க்கும் விற்பனையானது. சூரியகாந்தி விதைகள் மொத்தம் ரூ.10 லட்சத்துக்கு ஏலத்தில் விடப்பட்டதாக ஒழுங்குமுறை விற்பனைக் கூட பணியாளர்கள் தெரிவித்தனர்.

## கிருஷ்ணகிரியில் பலத்த காற்றுடன் மழை

கிருஷ்ணகிரியில் வெள்ளிக்கிழமை மாலை பலத்த காற்றுடன் மழை பெய்தது. சில இடங்களில் சாலையோரத்தில் வைக்கப்பட்டிருந்த பேனர்கள் சாலையில் சரிந்ததால் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது.

கத்திரி வெயிலின் கடைசி நாளான வெள்ளிக்கிழமை, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பலத்த காற்றுடன் மழை பெய்தது. பகலில் வெயிலின் உஷ்ணம் அதிகமாக இருந்த நிலையில், மாலையில் கார் மேகங்கள் சூழ்ந்தன. திடீரென பலத்த காற்றுடன் மழை பெய்தது.

குறிப்பாக, குந்தாரப்பள்ளி, வேப்பனஹள்ளி, குருபரப்பள்ளி, மகாராஜகடை, கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டணம், பையூர், போச்சம்பள்ளி உள்ளிட்டப் பகுதிகளில் பலத்த காற்று வீசியது.

கிருஷ்ணகிரியில் சாலையோரத்தில் வைக்கப்பட்டிருந்த திரைப்பட பேனர்கள், பல்வேறு அரசியல் கட்சிகளின் பேனர்கள் சாலையில் சரிந்ததால், போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது. கிருஷ்ணகிரி - பெங்களூரு சாலையில் ஒரு திரையரங்கம் அருகே வைக்கப்பட்டிருந்த பேனர்கள் சரிந்ததால் சாலையோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த 2 கார்கள் சேதமடைந்தன. மின்கம்பிகள் மீது மரக் கிளைகள் முறிந்து விழுந்ததில் கிருஷ்ணகிரி குடியிருப்பு பகுதி உள்ளிட்ட சில இடங்களில் சுமார் 2 மணி நேரம் மின்சாரம் தடைபட்டது. பேனர்கள் சாலையில் சரிந்ததை அறிந்த ரசிகர்கள், அரசியல் கட்சிகளின் தொண்டர்கள் நிகழ்விடத்துக்கு விரைந்து வந்து அவற்றை அப்புறப்படுத்தினர். கிருஷ்ணகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்தில் அகில இந்திய மாங்கனி கண்காட்சிக்காக அமைக்கப்பட்டுவரும் அரங்குகளின் தகரங்கள் காற்றில் பறந்தன. கிருஷ்ணகிரியில் பலத்த காற்று வீசியதில் பேனர்கள் சரிந்ததில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. இந்த மழையால் மாலை நேரத்தில் குளிர்ந்த காற்று வீசியது. உஷ்ணத்தில் தவித்த மக்களை இது மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

**உடன்குடியில் வேளாண்மை பயிற்சி முகாம்**

உடன்குடி அருகே வெங்கட்ராமானுஜபுரம் கிராமத்தில் வேளாண் மையம் சார்பில் பண்ணைப் பள்ளிப் பயிற்சி முகாம் நடைபெற்றது.

இப்பயிற்சி முகாமுக்கு உடன்குடி வேளாண் உதவி இயக்குநர் ச.உத்தண்டராமன் தலைமை வகித்தார். இதில், தென்னைக்கு இயற்கை மற்றும் செயற்கை உரமிடுதல் குறித்து செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட கையினால் அழுத்தம் கொடுத்து செயல்படும் கைத்தெளிப்பான் குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டது.

தென்னை நாற்றுகளை நடவு செய்யும் முறை, நாற்றுகளை தேர்வு செய்யும் முறை, தென்னையின் வயதைக் கண்டுபிடிக்கும் முறை குறித்து பணிநிறைவு வேளாண் துணை இயக்குநர் சூசைஅந்தோணி விளக்கினார். ஏற்பாடுகளை அட்மா திட்டப் பணியாளர்கள் ருக்மணி,வெள்ளைத்துரை ஆகியோர் செய்திருந்தனர். பணிநிறைவு வேளாண்மை உதவி இயக்குநர் துரைசாமி வரவேற்றார்.

**மீன்பிடிப்புத் தொடங்கியது: விலை குறைய வாய்ப்பு**

மீன்பிடித் தொழிலை மீனவர்கள் வெள்ளிக்கிழமை தொடங்கினர். இதைத் தொடர்ந்து, மீன் விலை குறைய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

மீன்களின் இனப்பெருக்கக் காலத்தை கணக்கிட்டு ஏப்ரல் 15-ஆம் தேதி முதல் மே 29-ஆம் தேதி வரையில் தமிழகத்தில் கடலில் மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டிருந்தது. இந்த தடைக் காலத்தில் மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டு வந்தது. 45 நாள்கள் தடைக் காலத்துக்குப் பின்னர் சனிக்கிழமை (மே 30) மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குள் செல்வார்கள் என்று கூறப்பட்டது. ஆனால் வெள்ளிக்கிழமை நல்ல நாளாக இருப்பதாக கருதிய மீனவர்கள் ஒரு நாளைக்கு முன்னதாகவே தங்களது தொழிலைத் தொடங்கினர். சுமார் 500 படகில் மீனவர்கள் மீன்பிடிப்பதற்காக கடலுக்குள் சென்றனர்.

பின்னர், கரை திரும்பிய மீனவர்கள் தாங்கள் பிடித்து வந்த மீன்களை விற்பனை செய்தனர். இதனால் மீன்பிடி துறைமுகம் மீண்டும் களைகட்டத் தொடங்கியது. தற்போது மீன்களின் வரத்தும் அதிகரிக்கத் தொடங்கியதால் விலை குறையும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

**இன்று விலையில்லா கால்நடைகளுக்கு இனப்பெருக்க மருத்துவப் பரிசோதனை**

விழுப்புரம் மாவட்டத்தில், விலையில்லா கால்நடைகளுக்கான இனப்பெருக்க மருத்துவ பரிசோதனை முகாம் மே **30**ஆம் தேதி **(**சனிக்கிழமை**)** நடைபெறுகிறது**.** இது குறித்து மாவட்ட ஆட்சியர் வா**.**சம்பத் வெளியிட்ட செய்திக்குறிப்பு**:** விழுப்புரம் மாவட்டத்தில் **2011**ஆம் ஆண்டு முதல் **2015**ஆம் ஆண்டு முடிய **92** கிராம ஊராட்சிகளைச் சேர்ந்த **4,618** பயனாளிகளுக்கு **4,618** கறவைப் பசுக்கள்**, 4,924** கன்றுகள்**, 863** ஊராட்சிகளைச் சேர்ந்த **39,435** பயனாளிகளுக்கு தலா **4** ஆடுகள் வீதம் **1,56,940** ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன**.** இவைகள் இனப்பெருக்கமும் செய்துள்ளன**.**

இவைகளுக்கு இலவச மருத்துவ பரிசோதனை முகாம் மே 29, 30ஆம் தேதிகளில் நடைபெறுகிறது. கால்நடைகள் வழங்கப்பட்ட பயனாளிகளின் இருப்பிடம் கால்நடை மருந்தகங்களுக்கு தொலைவில் இருப்பதால் அந்தந்த கிராமத்துக்கு சென்று கால்நடைகளை ஆய்வு செய்து நோயுள்ள கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் கால்நடைகளின் எண்ணிக்கையை ஆய்வு செய்தல் மற்றும் குடற்புழுக்களால் கால்நடைகளில் ஏற்படும் இழப்பைத் தவிர்த்து ஆடுகளின் உடல் எடையை அதிகரித்தல் கறவைப் பசுக்களின் பால் உற்பத்தியை பெருக்கி அதிகப்படியான லாபம் பெறுதல் போன்ற நோக்கங்களுக்காக மாதம் ஒரு முறை இம் முகாம் நடைபெறுகிறது.

விலையில்லா வெள்ளாடுகள், கறவைப் பசுக்கள் வழங்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த பொதுமக்கள் தங்கள் கால்நடைகளை அந்தந்த பகுதியைச் சார்ந்த கால்நடை உதவி மருத்துவர், கால்நடை ஆய்வாளர் மற்றும் கால்நடை பராமரிப்பு உதவியாளர் அடங்கிய குழுக்களால் நடத்தப்படும் முகாம்களுக்கு கொண்டு வந்து குடற்புழு நீக்கம் மற்றும் நோயுள்ள கால்நடைகளுக்கு சிகிச்சை செய்து இழப்பில் இருந்து

காப்பாற்றி ஆடுகளின் உடல் எடையை அதிகரித்தும், கறவைப் பசுக்களில் பால் உற்பத்தித் திறனை பெருக்கியும் பொருளாதாரத்தில் வளர்ச்சி அடையலாம் என தெரிவித்துள்ளார்.

**செஞ்சி, அவலூர்பேட்டையில் பலத்த மழை**

செஞ்சி மற்றும் அவலூர்பேட்டையில் புதன்கிழமை மாலை இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது. செஞ்சியில் நாலாபுறமும் கருமேகங்கள் சூழ்ந்தது. பலத்த புழுதிக் காற்று வீசியது. சிறிது நேரத்தில் காற்றுடன் பலத்த மழை பெய்தது. இரவு 7.30 மணி வரை இடி, மின்னலுடன் கூடிய பலத்த மழை நீடித்தது. அதேபோல, அவலூர்பேட்டையிலும் பலத்த மழை பெய்தது. அவலூர்பேட்டையில் புதன்கிழமை வாரச்சந்தை என்பதால் மக்களையும் வியாபாரிகளையும் மழை பாதித்தது.

மழையைத் தொடர்ந்து இடி, மின்னலுடன் இரவு 9 மணி வரை மழை நீடித்தது. நீண்டநாளாக நீடித்த வெப்பத்தின் தாக்கம் தணிந்தது. இந்த மழை பரவலாக சுற்றுப்புற கிராமங்களிலும் பெய்தது. கிராமப்புறங்களில் நீடித்த குடிநீர்ப் பற்றாக்குறை குறைந்தது. விவசாயத்துக்கான நீர்த் தேவையும் ஓரளவிற்கு நிறைவை அளிப்பதாகவும் கால்நடைகளுக்கு மேய்ச்சலுக்கான புல் கிடைக்கும் என மக்கள் கூறினர். இந்த மழை ஈரத்தை பயன்படுத்தி மரக் கன்றுகளை நட்டு, மண் வளம், மழை வளம் காக்க இயற்கை ஆர்வலர்கள் ஆலோசனை வழங்கினர்.

இன்றைய வேளாண் செய்திகள்

**ஜூன் 3ல் கேரளாவில் பருவமழை துவக்கம்**

திருவனந்தபுரம் : ஜூன் 3ம் தேதி முதல் கேரளாவில் பருவமழை துவங்கும் என கேரள வானிலை ஆய்வு மைய இயக்குனர் சுதீவன் தெரிவித்துள்ளார்.

**வெப்ப சலனம் காரணமாக தமிழகத்திற்கு மழை**

சென்னை: வெப்ப சலனம் காரணமாக தமிழகத்தில் இன்று மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது குறித்த அவை கூறியதாவது: கோடை வெயில் முடிந்த பின்னரும் ஒரிரு நாட்கள் அதன் தாக்கம் நீட்டிக்க கூடும். தமிழகத்தில் வெப்ப சலனம் காணப்படுவதால் தமிழகத்தின் ஒரிரு இடங்களில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது என ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**சொல்வதெல்லாம் உண்மை!விவசாய துறைக்கு ஒதுக்கிய மானியம் முடக்கம் ண குறைதீர்ப்பு கூட்டத்தில் அதிகாரிகள் ஒப்புதல்**

கோவை:தமிழக பட்ஜெட்டில், அறிவிக்கப்பட்ட சொட்டுநீர் பாசன

திட்டம், 10 மாதங்களாக முடக்கம் செய்யப்பட்டது. தற்போது, வெளியிட்டுள்ள அரசாணையும் விவசாயிகள் பயன்படாத நிலையுள்ளது என்ற விவசாயிகளின் புகாரை, அதிகாரிகள்

ஒப்புக்கொண்டனர்.கோவை கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில், மாவட்ட விவசாயிகள் குறைதீர்ப்பு கூட்டம், நேற்று நடந்தது. டி.ஆர்.ஓ., கிறிஸ்துராஜ் தலைமை வகித்தார்.கூட்டத்தில் விவசாயிகள் பேசுகையில், 'தமிழக பட்ஜெட்டில், சொட்டுநீர் மற்றும் நுண்நீர் பாசன முறையை

அமல்படுத்தி, நிலத்தடி நீர்மட்டத்தை பாதுகாக்கும் அறிவிப்பு வெளியானது. அதன்படி, 400 கோடி ரூபாயில், 1.3 லட்சம் ஏக்கரில் சொட்டுநீர் பாசன முறை அமைக்கப்படும் என, உத்தரவாதம் கொடுக்கப்பட்டது. கடந்த, 10 மாதங்களாக, திட்டம் செயல்படுத்தப்படாமல் முடக்கப்பட்டது. தற்போது, 37 ஆயிரம் ஏக்கரில், 88 கோடி ரூபாயில் திட்டத்தை செயல்படுத்த அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. 'கோவை மாவட்டத்தில், 258 ஏக்கரில் இந்த திட்டத்தை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. சொட்டுநீர் பாசன நிறுவனங்களுக்கு வழங்க வேண்டிய தொகையை அரசு நிலுவை வைத்துள்ளதால், நிறுவனங்கள் முன்வராத நிலையில், திட்டம் செயல்படுத்தப்படாமல் உள்ளது. இதனால், நிலத்தடி நீர்மட்டத்தை பாதுகாக்கும், தொலைநோக்கு திட்டமும் முடங்கி விட்டது' என வேதனை தெரிவித்தனர்.இக்கருத்தை, வேளாண், வேளாண் பொறியியல், தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் ஒப்புக்கொண்டனர். 'திட்டம் பற்றி விரிவான அறிக்கை தயாரித்து, முதல்வரின் தனிப்பிரிவுக்கு, மாவட்ட நிர்வாகம் சார்பில், அனுப்பப்படும். விவசாயிகள் பாதிக்காத வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்' என, டி.ஆர்.ஓ., தெரிவித்தார். 'ஆவின்' பால் கொள்முதலில் ஆளுங்கட்சியினரால் தான் பிரச்னை ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் அதிருப்தி தெரிவித்தனர். விவசாயிகள் கூறுகையில், 'கடந்த காலத்தில், தனியார் பால் விலை உயர்த்தியபோது, விவசாயிகள் தனியாரை நாடிச்சென்றனர். பால் உற்பத்தி அதிகரித்துள்ள நிலையில், பால் பவுடர் கிலோவுக்கு, 175 ரூபாய் குறைந்துள்ளது. இதனால், தனியார், பால் கொள்முதல் விலையை குறைத்து விட்டனர்.

'ஆவின் பால் கொள்முதல் கூட்டுறவு சங்க தலைவராக இருக்கும் ஆளுங்கட்சியினர், விவசாயிகள் உற்பத்தி செய்யும் பாலை, ஆவினில் குறைந்த விலைக்கு கொள்முதல் செய்து ஊழல் செய்கின்றனர். இதனால், இருப்பு வைக்க முடியாத அளவுக்கு பால் கொள்முதல் அதிகரித்துள்ளது.

ஒரு நாள் பால் கொள்முதலை நிறுத்தும் துரதிஷ்ட முடிவை ஆவின் நிர்வாகம் எடுத்து வருகிறது. இதை தவிர்க்க, பால் கொள்முதல் நிலைய இருப்பு அளவை அதிகரிக்க வேண்டும்; பால் பவுடரை அரசே இருப்பு வைக்க வேண்டும். இதனால், பால் உப பொருட்கள் விலை உயரும்' என, விவசாயிகள் தெரிவித்தனர்.

விவசாயிகளின் இக்கருத்தை, ஆவின் அதிகாரிகள் அமோதித்ததால், பிரச்னை குறித்து விரிவான அறிக்கை தயாரித்து, அரசுக்கு அனுப்ப, குறை தீர்ப்பு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

'தவறு அங்கே; தண்டனை இங்கே'

'தாலுகா அலுவலகத்தில் பட்டா பெயர் மாற்றம் செய்யும்போது, பெரும் தவறுகள் ஏற்படுகிறது. பட்டாதாரர் பெயரை தவறாக குறிப்பிடுகின்றனர், வேறு நபர்கள் பெயர் சேர்க்கப்படுகிறது. இதை சரி செய்ய விவசாயிகள் அணுகும் போது, 30 ஆண்டுக்குரிய ஆவணங்களை கொண்டு வருமாறு அலைக்கழிக்கின்றனர். இறுதியாக, பணம் கொடுத்தால் தான், தவறு சரி செய்யப்படுகிறது. அதிகாரிகள் தவறை, அதிகாரிகள் சரி செய்ய உத்தரவிட வேண்டும்' என விவசாயிகள் வற்புறுத்தினர்.விளக்கமளித்த டி.ஆர்.ஓ., "பட்டா தொடர்பாக விவசாயிகள் புகார் கொடுக்கும்போது, மனுவை ஆய்வு செய்து, எங்கு தவறு நடந்தது என்பதை உறுதிப்படுத்த வேண்டும். அதிகாரிகள் தரப்பில், தவறு ஏற்பட்டிருந்தால் உடனடியாக திருத்தம் செய்ய வேண்டும். இதை தாசில்தார்கள் கண்காணிக்க வேண்டும்," என்றார்.

**தென்னை பராமரிப்புவிவசாயிகள் தீவிரம்**

பல்லடம்:கோடை மழை பெய்துள்ளதால், தென்னை தோட்டங்களை தயார் செய்வதில், பல்லடம் பகுதி விவசாயிகள் முழுவீச்சில் இறங்கியுள்ளனர்.பல்லடம் மற்றும் சுல்தான்பேட்டை பகுதியில், 25

லட்சம் தென்னை மரங்கள் உள்ளன. கடந்தாண்டு பருவமழை ஓரளவு கைகொடுத்ததால், இப் பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் சற்று உயர்ந்தது.இந்தாண்டு கோடை மழை பெய்து, விவசாயிகளை குளிர வைத்துள்ளது. இதனால், கடந்த ஐந்து ஆண்டுகளாக தோட்டத்தை பராமரிக்காமலும், காய்ந்து பட்டுப்போன மரங்களை அழிக்காமலும் விட்டிருந்த விவசாயிகள், அவற்றை சீரமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். மேலும், மரங்களுக்கு மருந்து வைப்பது, காய்ந்து தொங்கும் மட்டைகளை வெட்டிக் களைவது, தென்னங்கன்று நடுவது போன்ற பணிகள் நடந்து வருகின்றன.

**மக்காச்சோள சாகுபடிவிவசாயிகள் தீவிரம்**

பொங்கலூர்:கோடை மழை பெய்து தண்ணீர் பற்றாக்குறை நீங்கியுள்ளதால், விவசாயிகள் மக்காச்சோளம் சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்டுகின்றனர்.கடந்த சில ஆண்டுகளாக நிலவி வந்த தண்ணீர் பற்றாக்குறையால், விவசாயிகள் மக்காச்சோளம் சாகுபடி செய்யவில்லை. உள்ளூர் விளைச்சல் இல்லாததால், கோழிப்பண்ணையாளர்கள் தங்களின் தேவைக்கு வெளியூர் வரத்தையே, அதிகம் நம்பியிருந்தனர்.இதனால், போக்குவரத்து செலவு அதிகரித்து, மக்காச்சோளம் அடக்க விலை எகிறியது; உள்ளூர் மக்காச்சோளத்துக்கும் நல்ல விலை கிடைத்தது. ஒரு குவிண்டால், 1,250 முதல், 1,600 ரூபாய் வரை விலை போனது. கடந்த சில ஆண்டுகளாக, நல்ல விலை கிடைத்து வந்தது.எனினும், இருக்கின்ற தண்ணீரை வைத்து, குறுகிய காலப்பயிர்கள், காய்கறிகளை@ய, விவசாயிகள் பயிரிட்டு வந்தனர். கடந்த ஓராண்டாக காய்கறி விளைச்சல் அதிகரித்து, கட்டுப்படியான விலை கிடைக்கவில்லை. தற்போது வைகாசி பட்டம் துவங்கியுள்ளது. இதில் சாகுபடி செய்யும் மக்காச்சோளம், நல்ல மகசூல் கொடுக்கும்.

எனவே, குறைந்த லாபம் கிடைத்தாலும், ஒரு போதும் நஷ்டம் ஏற்படாது என்பதால், விவசாயிகள், மீண்டும் மக்காச்சோளம் சாகுபடி செய்யத்தயாராகி வருகின்றனர்.

**மாவட்டத்தில் பரவலாக மழை சேத்தியாத்தோப்பில் 95.20 மி.மீ., பதிவு**



கடலூர்: கடலூர் மாவட்டத்தில் பரவலாக பெய்த கோடை மழை விவசாயிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. மாவட்டத்திலேயே சேத்தியாத்தோப்பில் அதிகபட்சமாக 95.20 மி.மீ., மழை பதிவானது.

கடலூர் மாவட்டத்தில் கத்திரி வெயில் சுட்டெரிந்து வந்தது. நாள்தோறும் 103 டிகிரிக்கு மேல் வெயில் காய்ந்ததால் அனல் காற்று வீசியது. இரவில் மக்கள் தூங்குவதற்கே அவதிப்பட்டனர். இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை திடீரென வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. மாலை 6:00 மணிக்கு இடியுடன் கூடிய மழை பெய்தது. மாவட்டத்தில் நேற்று முன்தினம் மாலை முதல் நேற்று காலை வரை பெய்த மழையளவு மி.மீ., விவரம்: சிதம்பரம் 24, கடலூர், பரங்கிப்பேட்டை 19, காட்டுமன்னார்கோவில் 58, தொழுதூர் 8.30, ஸ்ரீமுஷ்ணம் 32, விருத்தாசலம் 64, பண்ருட்டி 24, கொத்தவாச்சேரி 36, கீழ்ச்செருவாய் 31,

வானமாதேவி 54.40, அண்ணாமலை நகர் 24.80, சேத்தியாத்தோப்பு 95.20, புவனகிரி 61, லால்பேட்டை 47, மேமாத்தூர் 30, காட்டுமயிலூர் 17, வேப்பூர் 22, குப்பநத்தம் 71.50, லக்கூர் 9.20, பெலாந்துரை 11 மி.மீ., மழை பெய்துள்ளது. மாவட்டத்திலேயே சேத்தியாத்தோப்பில் 95.20 மி.மீ., மழை பெய்துள்ளது. நேற்று முன்தினம் பெய்த மழை காய்கறி உள்ளிட்ட பயிர்களுக்கு தேவையானதாக இருந்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். நேற்றும் வானம் மேக மூட்டத்துடன் இருந்தது.

## புதுக்கோட்டை பலா பழத்திற்கு கும்மிடிப்பூண்டியில் வரவேற்பு

கும்மிடிப்பூண்டி: புதுக்கோட்டை மாவட்ட பலா பழங்கள், கும்மிடிப்பூண்டி பகுதிவாசிகளிடம் வரவேற்பு பெற்றதால், கன ஜோராக விற்பனை ஆகிறது. திருச்சி பகுதியைச் சேர்ந்த வியாபாரிகள், பத்து நாட்களுக்கு முன்பு புதுக்கோட்டை மாவட்டத்தில் இருந்து 10 டன் பலா பழங்களை, கும்மிடிப்பூண்டிக்கு லாரி மூலம் கொண்டு வந்தனர். ஜி.என்.டி., சாலை ஓரம், பிரித்வி நகர் எதிரே உள்ள பகுதியில், மரத்தடியில் குவித்து விற்பனைக்கு வைத்திருந்தனர். ஐந்து நாட்களுக்குள் அனைத்தும் விற்று தீர்ந்தன. தற்போது மீண்டும் 10 டன் பலா பழங்களை கொண்டு வந்து விற்பனைக்காக இறக்கியுள்ளனர். 100 முதல் 300 ரூபாய் வரை, அளவுக்கு ஏற்றபடி விற்று வருகின்றனர். பகுதிவாசிகள் ஆர்வமுடன் வாங்கி செல்கின்றனர். இதுகுறித்து, பலா விற்பனையாளர் கூறுகையில், 'கும்மிடிப்பூண்டி பகுதியை சேர்ந்த நண்பர் ஒருவர் கூறிய ஆலோசனை படி இங்கு பலா விற்பனை செய்ய வந்தோம். இந்த அளவிற்கு பலா பழத்திற்கு வரவேற்பு கிடைக்கும் என, நாங்கள் எதிர் பார்க்கவில்லை' என தெரிவித்தார்.

**கிருஷ்ணகிரியில் சூறாவளி காற்றுடன் மழை**

ஓசூர்: கிருஷ்ணகிரி மாவட்டத்தின் பெரும்பாலான இடங்களில், சூறாவளி காற்றுடன் கனமழை பெய்தது. கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் பகுதியில், நேற்று முன்தினம் கனமழை பெய்தது. இதனால், ஏரித்தெரு அம்மா உணவகம் பகுதியில், சாலையில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. ஒரு மணி நேரத்திற்கும் மேலாக பெய்த மழை காரணமாக, இரவு முழுவதும் குளிர்ந்த காற்று வீசியது. கடந்த சில நாட்களாக வெயில் வாட்டி எடுத்த நிலையில், கனமழை பெய்ததால், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இதேபோல், கிருஷ்ணகிரி, பர்கூர், காவேரிப்பட்டணம், சூளகிரி, வேப்பனஹள்ளி, ஜெகதேவி போன்ற பகுதிகளில், நேற்று மாலை சூறாவளி காற்றுடன் கனமழை பெய்தது. கிருஷ்ணகிரி ராஜா தியேட்டரில் வைக்கப்பட்டிருந்த பேனர் கீழே விழுந்ததில், இரு கார்கள் சேதமானதுடன், போக்குவரத்து முற்றிலும் பாதிக்கப்பட்டது. மேலும், கிருஷ்ணகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில், வரும், 5ம் தேதி நடக்கும் மாங்கனி கண்காட்சிக்காக அமைக்கப்பட்டு வரும், ஸ்டால் கூரைகள் காற்றில் பறந்தன. கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டணம், ஆலப்பட்டி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டிருந்த மாங்காய்கள் உதிர்ந்ததால் விவசாயிகள் கவலை அடைந்தனர். ஆங்காங்கு மின்தடை ஏற்பட்டதால், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

**கொப்பரை விலை அரசு நிர்ணயிக்க உழவர் உழைப்பாளர் கட்சி வலியுறுத்தல்**

தாராபுரம்: தாராபுரத்தில் உழவர் உழைப்பாளர் கட்சியின் மாநில செயற்குழு கூட்டம் நடந்தது. மாநில தலைவர் செல்லமுத்து தலைமை

வகித்தார். மாநில பொதுச்செயலாளர் திருநாவுக்கரசர், மாநில பொருளாளர் பாலசுப்பிரமணியன், மாநில பிரச்சார குழு செயலாளர் குப்புசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். திருப்பூர் மாவட்ட செயலாளர் ஈஸ்வரமூர்த்தி வரவேற்றார். கூட்டுறவு மற்றும் தனியார் பால் கொள்முதல் நிலையங்களில், பல்வேறு குளறுபடிகள் நடக்கிறது. தற்போது வாரத்துக்கு ஒரு நாள் பால் கொள்முதல் செய்யப்படுவதில்லை. பால் விலை குறைத்து வழங்கப்படுவதால், பால் உற்பத்தியாளர்கள், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலை தொடர்ந்து நீடித்தால், ஆவின் நிறுவனங்கள் முன் தொடர் முற்றுகை போராட்டம் நடத்தப்படும். அவிநாசி - அத்திக்கடவு திட்டத்தை உடனே நிறைவேற்ற வேண்டும். மேகதாது பகுதியில் அணை கட்டுவதையும், பாம்பாற்றின் குறுக்கே அணை கட்டுவதையும், மத்திய அரசு தடுத்து நிறுத்த வேண்டும். தேங்காய் கொப்பரையின் விலையை, அரசே விலை நிர்ணயம் செய்ய வேண்டும். விவசாயிகளின் உற்பத்தி பொருட்களுக்கு கட்டுபடியான விலை கிடைக்க வேண்டும். கூட்டுறவு சங்கம், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில், விவசாயிகள் வாங்கிய கடனை மத்திய, மாநில அரசுகள் ரத்துசெய்ய வேண்டும். வெங்காயத்தை இருப்பு வைத்து விற்பனை செய்ய, குளிர்பதன கிடங்கு அமைக்க வேண்டும் என்பது உட்பட பல்வேறு தீர்மானங்களை நிறைவேற்றினர். ஈரோடு, திருப்பூர், கோவை, ஊட்டி உட்பட பல்வேறு மாவட்டங்களைச்சேர்ந்த பொறுப்பாளர்கள்,தொண்டர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## தோட்டக் கலைத்துறை செயல்பாடு: மாவட்ட கலெக்டர் நேரில் ஆய்வு

கரூர்: தோட்டக்கலைத்துறை திட்டங்களின் செயல்பாடு குறித்து, கரூர் மாவட்ட கலெக்டர் ஜெயந்தி, நேரில் ஆய்வு செய்தார். கரூர் மாவட்டம், உப்பிடமங்கலம் லிங்கத்தூரில் பழனியப்பன் என்பவர் பந்தல் காய்கறிகள் சாகுபடித் திட்டத்தில், விவசாயம் செய்து வரும் இடத்தை பார்வையிட்டார். அப்போது, பழனியப்பன் கூறியதாவது: பாகற்காய்,

பீர்க்கங்காய், சுரக்காய், புடலங்காய் போன்றவற்றை கொடி வகைகளை,சொட்டு நீர் பாசனத்தை பயன்படுத்தி பயிர் செய்து வருகிறேன். அரசு மானியமாக, 80 ஆயிரம் ரூபாய் கிடைத்துள்ளது. பொருளாதாரா அபிவிருத்தி திட்டத்தில், 20 பேர் கொண்ட குழுவாக வங்கியில் தலா, 1,000 ரூபாய் செலுத்தி கணக்கு துவங்கியுள்ளோம். காய்கறிகளை கொண்டு செல்ல டாட்டா ஏஸ் வாகனம் வாங்க வங்கி கடன் தருவர். அதில், அரசின் சார்பில், 40 ஆயிரம் மானியம் கிடைக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

லிங்கத்தூர் மேல்பாகத்தைச் சேர்ந்த ராமசாமி கூறியதாவது: நுண்ணீர் பாசன இயக்க திட்டத்தில், மூன்று ஏக்கரில் மா பயிரிட்டுள்ளேன். நல்ல விளைச்சல் கிடைத்துள்ளது. அரசு மானியமாக, 34 ஆயிரத்து, 800 ரூபாய் கிடைத்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

அப்போது, கலெக்டர் ஜெயந்தி கூறியதாவது: ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம் மூலம், 2011ம் ஆண்டு முதல், 2015ம் ஆண்டு வரை, 8,255 பேர் பயன் அடைந்துள்ளனர்.

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம், துல்லியப்பண்ணை திட்டத்தில், 2011ம் ஆண்டு முதல், 2015ம் ஆண்டு வரை, 316 பேர் பயன் அடைந்துள்ளனர்.

மானாவாரி பரப்பு மேம்பாட்டுத் திட்டத்தில், 2012ம் ஆண்டு முதல், 2015ம் ஆண்டு வரை, 398 பேர் பயன் அடைந்துள்ளனர். நுண்ணீர் பாசன இயக்கத்திட்டத்தில், 2011-15ம் ஆண்டுகளில், 1,430 பேர் பயன் அடைந்துள்ளனர்.

தேசிய மூலிகை பயிர் சாகுபடி இயக்கத்தின் மூலம், 2011-15ம் ஆண்டுகளில், 537 பேரும், அம்மா பண்ணை மகளிர் திறன் மேம்பாட்டுத் திட்டத்தில், 120 பேரும், தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டம் பெருநகர காய்கறி தொகுதிப்பு அபிவிருத்தி திட்டத்தில், 1,000 பேரும் பயன் அடைந்துள்ளனர்.

இவ்வாறு அவர் தெரிவித்தார். நிகழ்ச்சியில், பி.ஆர்.ஓ., பாண்டி, தோட்டக்கலை துணை இயக்குனர் வளர்மதி, தோட்டக்கலை உதவி இயக்குனர் தாந்தோணி வட்டாரம் சொர்ணமாணிக்கம், தோட்டக்கலை அலுவலர் பேபி மற்றும் அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்.

**வேளாண் அறிவியல் இயக்க கிளையகம் திறப்பு விழா**

தஞ்சாவூர்: தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு கால்நடை மருத்துவக் கல்லூரியில், வேளாண் அறிவியல் தமிழ் இயக்கத்தின் கிளையகம் திறப்பு விழா நடந்தது. இதில், கல்லூரி முதல்வர் செல்வக்குமார், தலைமையேற்று துவங்கி வைத்தார். இயக்கத்தின் தலைவர் முத்தமிழ்ச்செல்வன், பொதுச்செயலாளர் செந்தில்குமார் ஆகியோர், நிகழ்ச்சியில் இயக்கத்தின் நோக்கங்களைப் பற்றி விளக்கினர். விழாவில், தமிழ் பல்கலைக் கழகத்தின் பேராசியர் நல்லசிவம், கல்லூரி கிளையக செயலாளார் ரங்கநாதன், உட்பட பலர் பங்கேற்றனர்.

**விவசாயிகளுக்கு பயிர்காப்பீட்டு தொகை வழங்கும் பணி துவக்கம்**

வேதாரண்யம்: நாகை மாவட்டம், வேதாரண்யம் மற்றும் அண்டர்காடு தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில், 2013-14-ம் ஆண்டு விவசாய பயிர்காப்பீட்டு திட்டத்தில், வேதாரண்யத்தில், 2,086 விவசாயிகளும், அண்டர்காட்டில், 768 விவசாயிகளும், பதிவு செய்து பிரிமியத் தொகை செலுத்தி இருந்தனர். இவர்களுக்கு நூறு சதவீத காப்பீட்டு தொகை வழங்க, அரசு உத்திரவிட்டது. அதன்படி, வேதாரண்யத்தில் பயிர் காப்பீடு தொகை நான்கு கோடியே, 76 லட்சத்து, 40 ஆயிரமும், அண்டர்காட்டில் ஒரு கோடியே, 32 லட்சத்து, 21 ஆயிரமும், விவசாயிகளுக்கு எம்.எல்.ஏ. காமராஜ், வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், நிலவள வங்கித் தலைவர் சிவானந்தம், வேளாண் விற்பனை கூட்டுறவு சங்க தலைவர் நமசிவாயம், கூட்டுறவு வங்கித் தலைவர்கள்,

கூட்டுறவு சங்க பிரதிநிதிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்.

தினத் தந்தி

## இன்றைய வேளாண் செய்திகள்

## தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் கீழ் மானிய விலையில் ரூ.7 கோடி மதிப்பிலான வேளாண் இடுபொருட்கள் வினியோகம்



ராமநாதபுரம்

தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின்கீழ் மானிய விலையில் வேளாண் இடுபொருட் கள் வழங்கப்பட்டுள்ளது.

வேளாண் உற்பத்தி

ராமநாதபுரம் மாவட்டத் தில் தமிழக அரசின் குறிக்கோ ளான வேளாண் உற்பத்தி இருமடங்காகவும், வருமா னத்தை 3 மடங்காகவும் உயர்த்திடும் வகையில் தோட் டக்கலைத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி நயினார்கோவில் யூனியன்

பாண்டியூரில் மரக் கன்றுகள் வளர்ப்பு, கமுதி யூனியன் அச்சங்குளத்தில் மண்புழு உரம் தயாரிப்பு, கோரைப்பள்ளம் கிராமத்தில் பழக் கன்றுகள் வளர்ப்பு, தேன் சேகரிப்பு, வீரிய ரக வெண் டைக்காய் பயிர் சாகுபடி, சொட்டு நீர்ப்பாசனம் போன் றவை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ராமநாதபுரம் மாவட்டத் தில் ஒருங்கிணைந்த தோட் டக்கலை அபிவிருத்தி திட் டத்தின் கீழ் கடந்த 4 ஆண்டு களில் ரூ.58 லட்சத்து 32 ஆயிரம் செலவில் 3,496 எக்டேர் பரப்பளவில் 6,992 விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் காய்கறி மற்றும் மிளகாய் விதைகள் வழங்கப் பட்டுள்ளது. இதேபோல தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின்கீழ் ரூ.6 கோடியே 97 லட்சத்து 92 ஆயிரம் செலவில் 4,739 எக்டேர் பரப்பளவில் 7,779 விவசாயிகளுக்கு மா, நெல்லி, சப்போட்டா போன்ற பழப் பயிர்களும், வெண்டை உள் ளிட்ட வீரிய வகை காய்கறி கள், மிளகாய், கொத்தமல்லி ஆகிய பயிர்களுக்கு செடிகள், விதைகள், உரங்கள், உயிர் பூச்சி, பூஞ்சான் மற்றும் கொல் லிகள், நிலப்போர்வைகள், தேனீக்களுடன் கூடிய தேனீ வளர்ப்பு பெட்டிகள், தேன் எடுக்கும் கருவிகள், தெளிப் பான்கள், உழவு இயந்திரங் கள் போன்றவை 50 சதவீத மானியத்தில் வழங்கப்பட்டுள் ளது.

மானியம்

தேசிய நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ் தோட்டப் பயிர்களுக்கு நுண்ணீர் பாசன வசதிகள் அமைத்திட சிறு, குறு விவசாயிகளுக்கு முழு மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்திலும் வழங்கப்பட் டுள்ளது. தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் தோட்டக்கலை சார்ந்த பழப் பயிர்கள் சாகுபடி செய்ய 50 சதவீத மானியத்தில் பழச்செ டிகள், ரசாயன உரங்கள், இயற்கை உரங்கள், தாவர பூச்சி, பூஞ்சான் கொல்லிகள் ஆகியவைகள் விவசாயிக ளுக்கு வழங்கப்பட்டு ரூ.1 கோடியே 49 லட்சத்து 29 ஆயி ரம் செலவில் 668.6

எக்டேர் பரப்பளவில் 604 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் உத்தரகோ சமங்கை, பாலாறு, கீழ் குண் டாறு மற்றும் பரளையாறு நீர்வடிப் பகுதிகளில் விவசா யிகளுக்கு காய்கறி பயிர்கள் மற்றும் மிளகாய் பயிர் சாகு படி செய்ய வீரிய காய்கறி, மிளகாய் விதை, ரசாயன உரம், இயற்கை உரம், இயற்கை பூச்சி, பூஞ்சான கொல்லிகள் போன்ற இடுபொருட்கள் 50 சதவீத மானியத்தில் ரூ.2 கோடியே 75 லட்சத்து 61 லட் சம் செலவில் 3,383 எக்டேர் பரப்பளவில் 6,776 விவசாயி கள் பயனடைந்துள்ளனர்.

தோட்டக்கலை பண்ணை

தேசிய மூலிகைப் பயிர்கள் திட்டம் மூலம் சென்னா என் கிற அவுரி பயிர் சாகுபடி செய்ய 20 சதவீத மானிய தொகையாக விவசாயி ஒரு வருக்கு ரூ.5,000 மானியமாக 406 விவசாயிகளுக்கு வழங் கப்பட்டுள்ளது. மாநில சமச் சீர் நிதி திட்டத்தின் கீழ் ரூ.8 லட்சத்து 63 ஆயிரம் செல வில் 304 விவசாயிகளுக்கு 50 சத வீத மானிய விலை யில் மிளகாய், மல்லிபோன்ற பயிர் களை உலர்த்துவதற்கு தார்பாய் க ள் வழங்கப்பட்டுள் ளன. மேலும் இத்திட்டத்தின் கீழ் மிளகாய் பயிரினை உலர்த் துவதற்கு 90 சதவீத மானிய விலையில் ரூ.24 லட்சத்து 94 ஆயிரம் செலவில் 27 விவ சா யிகளுக்கு சூரிய ஒளி உலர் கூடங்கள் அமைத்து கொடுக் கப்பட்டுள்ளன. ராமநாதபு ரம் மாவட்டத்திற்¢கும் பிற மாவட்டங்களுக்கும் தேவை யான காய்கறி விதைகள் மற் றும் தரமான பழச்செ டி களை உற்பத்தி செய்வதற்கு திருவாடானை வட்டாரம் ஓரியூரில் புதிய அரசு தோட் டக்கலை பண்ணை உருவாக் கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டு முதல் காய்கறி விதை களும், பழச்செடிகளும் உற் பத்தி செய்யப்பட உள்ளன.

ராமநாதபுரம் மாவட்டத் தில் தோட்டக்கலைத் துறை யின் பல்வேறு திட்டங்களின் கீழ் கடந்த ஆண்டில் 17.111 எக்டேர் பரப்பில் மிளகாய் சாகுபடி, பழப்பயிர்கள் 810 எக்டேரிலும், காய்கறி பயிர் கள் 412

எக்டேரிலும், மலர்ப் பயிர்கள் 103 எக்டேரிலும் மூலிகைப்பயிர்கள் 56 எக்டே ரிலும் சாகுபடி செய் யப்பட்டு விவசாயிகள் பெரிதும் பயன டைந்து வருகின்றனர். ஒட்டு மொத்தமாக ராமநாதபுரம் மாவட்டத்தில் தோட்டக் கலைத்துறையின் திட்டங்க ளால் விவசாயிகள் வாழ்வில் பொருளாதார வளம் மேம் பட்டு வருகின்றனர்.

**மஞ்சளாறு அணையில் இருந்து 7 ஆண்டுகளுக்கு பிறகு தண்ணீர் திறப்பு**



தேவதானப்பட்டி அருகே உள்ள மஞ்சளாறு அணையில் இருந்து 7 ஆண்டுகளுக்கு பிறகு 2–ம் போக சாகுபடிக்காக தண்ணீர் திறக்கப்பட்டது.

<u>மஞ்சளாறு அணை</u>

தேனி மாவட்டம், தேவதானப்பட்டி அருகே மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் டம்டம் பாறைக்கு கீழ் பகுதியில் உள்ள பள்ளத்தாக்கு பகுதியில் மஞ்சளாறு அணை அமைந்துள்ளது. இந்த அணையின் மொத்த உயரம் 57 அடி ஆகும். அணையின் கொள்ளளவு 487.35 மில்லியன் கன அடி.

இதன் மொத்த பாசன பரப்பளவு 5 ஆயிரத்து 259 ஏக்கர். இதில் பழைய ஆயக்கட்டு பாசனம் 3 ஆயிரத்து 386 ஏக்கரும், புதிய ஆயக்கட்டு பாசனம் 1,873 ஏக்கரும் உள்ளது. தேனி மாவட்டத்தில் 3 ஆயிரத்து 148 ஏக்கரும், திண்டுக்கல் மாவட்டத்தில் 2 ஆயிரத்து 111 ஏக்கரும் பாசன வசதி பெறுகிறது.

நேரடி பாசனம் இல்லாமல் மறைமுகமாக சுமார் 10 ஆயிரம் ஏக்கர் பாசனவசதி பெறுகிறது. இந்த அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பருவமழை சீராக பெய்ததால் முதல் போக பாசனத்திற்கு நவம்பர் மாதம் 2–வது வாரத்திலும், 2–ம் போக பாசனத்திற்கு மே மாதத்திலும் தண்ணீர் திறந்து விடப்படுவது வழக்கம்.

2–ம் போக பாசனம்

கடந்த ஆண்டுக்கு முன்பு தொடர்ந்து 3 ஆண்டுகளாக பருவமழை பொய்த்ததன் காரணமாக நேரடி பாசன வசதி பெற்றுவந்த நெல் சாகுபடி நிலங்கள், மறைமுக பாசனவசதி பெற்றுவந்த வாழை, கரும்பு போன்ற பணப்பயிர் சாகுபடி நிலங்கள் அனைத்தும் தரிசு நிலங்களாக மாறின.

இதனால் விவசாயிகளுக்கு கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. ஆனால் கடந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை நன்றாக பெய்ததால் தரிசு நிலங்கள் அனைத்திலும் விவசாயிகள் சாகுபடியை தொடங்கினர். இதனால் முதல் போக சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டு விளை பொருட்கள் உற்பத்தி அதிகரித்தன.

இந்நிலையில் கடந்த மாதம் பெய்த கோடை மழையால் மஞ்சளாறு அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது. அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளான வரட்டாறு, தலையாறு, மூலையாறு, இருட்டாறு ஆகிய பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்ததால் அணையின் நீர்மட்டம் 51 அடியை தாண்டியது.

தண்ணீர் திறப்பு

இதனால் 2–ம் போக சாகுபடிக்கு தண்ணீர் திறக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை வைத்தனர். இதனை ஏற்று அணையில் இருந்து

2–ம் போக சாகுபடி பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட தமிழக அரசு உத்தரவிட்டது.

அதன்படி மஞ்சளாறு அணையில் இருந்து 2–ம் போக பாசனத்திற்காக நேற்று தண்ணீர் திறந்து விடப்பட்டது. தேனி எம்.பி. பார்த்திபன், அணையில் இருந்து மதகை திறந்து வைத்தார். அத்துடன் அணையில் இருந்து பாய்ந்து சென்ற தண்ணீருக்கு மலர் தூவி வழிபாடு நடத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் பெரியகுளம் எம்.எல்.ஏ. லாசர், பெரியகுளம் ஒன்றியக்குழு தலைவர் செல்லமுத்து, மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் மகாலிங்கம், பெரியகுளம் ஆர்.டி.ஓ. ஜானகி, செயற்பொறியாளர் சேகர், உதவி செயற்பொறியாளர் செல்வம், உதவி பொறியாளர்கள் சென்றாம், கண்ணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

7 ஆண்டுகளுக்கு பிறகு...

அணையின் நீர்மட்டம் நேற்று 51.80 அடியாக இருந்தது. அணையில் இருந்து 64 நாட்களுக்கு விநாடிக்கு 20 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதன் மூலம் தேனி மாவட்டத்தில் 314 ஏக்கரும், திண்டுக்கல் மாவட்டத்தில் 583 ஏக்கரும் என்று மொத்தம் 897 ஏக்கர் நிலங்கள் 2–ம் போக பாசன வசதி பெறுகின்றன.

இந்த அணையில் இருந்து கடைசியாக கடந்த 2008–ம் ஆண்டு மே மாதம் 10–ந் தேதி 2–ம் போக பாசனத்திற்காக தண்ணீர் திறக்கப்பட்டது. 7 ஆண்டுகளுக்கு பிறகு நேற்று 2–ம் போகத்திற்காக தண்ணீர் திறக்கப்பட்டு உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

**மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் வனவிலங்குகளுக்காக 16 இடங்களில் ரூ.75¾ லட்சம் செலவில் குடிநீர் தொட்டிகள்**




விருதுநகர்,

வனவிலங்குகள் நீர் அருந்துவதற்காக வனப் பகுதியில் 16 இடங்களில் ரூ.75¾ லட்சம் செலவில் நீர் தொட்டிகள் அமைக் கப்பட்டுள்ளது.

ரூ.75¾ லட்சம் செலவில் விருதுநகர் மாவட்டத்தில் வன விலங்குகள் நீர் அருந்து வதற்காக மலைகளில் இருந்து கீழிறங்கி விவசாய நிலங்களை சேதப்படுத்தி வந்தன. இதன் மூலம் விவசாயிகள் பெறும் இழப்பு ஏற்பட்டு, இன்னல் களை சந்தித்தனர். முதல்– அமைச்சர் உத்தரவுப்படி விருதுநகர் மாவட்டத்தில் மேற்குதொடர்ச்சி மலை அடி வாரங்களில் ரூ.75¾ லட்சம் மதிப்பீட்டில் ஸ்ரீவில்லி புத்தூர் வனச்சரகம், அழகர் கோவில், அம்மன் கோவில், புதுப்பட்டி, குன்னூர், ரெங்கார்தீர்த்தம், சாப்டூர் வனச்சரகம், மல்ல புரம், வத்திராயிருப்பு வனச் சரகம், தொப்பிமலை, ராஜ பாளையம் வனச்சரகம், அம்மன் கோவில், வாலைக் குளம், சப்பாணி பரம்பு, அய்யனார் கோவில், தேவி யார் ஆகிய இடங்களில்ஆழ் துளை கிணறுகள் அமைக் கப்பட்டு விலங்குகள் நீர் அருந்துவதற்கான தொட்டி கள் அமைக்கப்பட்டு எந்தநேர மும் வன விலங்குகள்அருந்து வதற்கு செய்யப்பட்டுள்ள மையால் வன விலங்குகள்

விவசாய நிலங்களை சேதப் படுத்துவது முற்றிலுமாக குறைக்கப்பட்டுள்ளது.


மேலும், நீர்வள பாதுக்காப்பு மற்றும் பசுமைப்போர்வையை மேம்படுத்தும் திட்டத்தின் மூலம், நாபார்டு வங்கிஉதவி யுடன் 250 ஹெக்டேர் வனப் பகுதியில் 5 மீட்டர் நீளம் 1 மீட்டர் அகலம் மற்றும் 1 அடி ஆழம் உடைய 5000 நீர் சேகரிப்புக் குழிகள்வெட் டப்பட்டு சரிவின் கீழ் பகுதி யில் தீவன மரக்கன்றுகள் நடப்படுவதுடன் ஸ்டைலொ தீவன புல் விதைகளும்விதைக் கப்படுகின்றன.

தடுப்பணைகள்

இரண்டு தடுப்பணைகள் மற்றும் 1 கசிவு நீர்க்குட்டையும் ஏற்படுத்தப்படுகிறது. 2014– 2015–ல் இவ்வனஉயிரின சரணாலயத்தில் 1000ஹெக் டேர் பரப்பளவில் இப்பணி கள் மேற்கொள்ளப்பட்டுள் ளன.

தினகரன்

**மேட்டூரில் நீர்திறப்பு அதிகரிப்பு**



மேட்டூர் : மேட்டூர் அணையில் இருந்து குடிநீர் தேவைக்கு நீர்திறப்பு 2000 கனஅடியாக அதிகரிக்கப்பட்டது. காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருவதால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 1828 கனஅடியாக அதிகரித்துள்ளது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 1000 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வந்தது. இந்நிலையில், நேற்று முதல் நீர்திறப்பு வினாடிக்கு 2000 கனஅடியாக அதிகரிக்கப்பட்டது. நீர் வரத்தும், திறப்பும் சம அளவில் உள்ளதால், நீர்மட்டம் தொடர்ந்து 2வது நாளாக 71.28 அடியாக நீடிக்கிறது. நீர் இருப்பு 33.20 டிஎம்சி.கத்தரி பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்கத்தரி பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்தர்மபுரி மாவட்டத்தில் 18 மி.மீ மழை பதிவு; உழவுப்பணிகள் தீவிரம் தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் கடந்த 4ம் தேதி முதல் தொடர்ந்து கோடை மழை பெய்து வருவதால், அக்னி நட்சத்திர வெயிலின் தாக்கம் அதிகளவில் தெரியவில்லை. இதனால் பொதுமக்கள் வெயிலில் தாக்கத்தில் இருந்து தப்பிய நிலையில், கடந்த 3 நாட்களாக வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளது.

நேற்று முன்தினம் 96.8 டிகிரியாக பதிவானது. இந்நிலையில், நேற்று முன்தினம் காலை வெயில் அதிகரித்து மக்களின் நடமாட்டம் வெகுவாக குறைந்தது. திடீரென இரவில் பலத்த இடியுடன் மழை பெய்ய துவங்கியது. சுமார் 3 மணி நேரம் கொட்டி தீர்த்தது. இம்மழையால், விளை நிலங்களில் பயிரிட்ட கேழ்வரகு, நிலக்கடலை, எள் மற்றும் தீவனப்பயிர்கள் நன்கு விளைச்சலை தரும் என விவசாயிகள் கருதுகின்றனர். மேலும் கிணறுகளில் நீர்மட்டம் அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் மாவட்டத்தில் பெய்த மழையளவு விபரம்: அரூர் 8.3 மி.மீ, பாப்பிரெட்டிபட்டி 3.1 மி.மீ, பாலக்கோடு 2.2 மி.மீ, ஒகேனக்கல் 4.8 மி.மீ என மொத்தம் 18.4 மி.மீ மழை பதிவானது. தமிழகத்தில் மழை பெய்யும் என வானிலை ஆராய்ச்சி மையம் அறிவித்து நிலையில்,

தர்மபுரியில் நேற்று பகல் முழுவதும் வானம் மேக மூட்டமாக காணப்பட்டது. தொடர்ந்து தர்மபுரி மாவட்டத்தில் உழவுப்பணிகள் தீவிரம் அடைந்துள்ளன. அங்குள்ள விவசாயிகள் டிராக்டரை கொண்டு நிலத்தில் உழவு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**கோத்தகிரி சுற்றுவட்டார பகுதிகளில் கனமழை**

கோத்தகிரி: கோத்தகிரி சுற்றுவட்டார பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு 12 மணி முதல் அதிகாலை 6 மணி வரை தொடர்ந்து மழை பெய்தது. கோத்தகிரியில் 20 மி.மீ. மழையும், கோடநாட்டில் 29 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது. தொடர்மழை காரணமாக தேயிலை செடிகளில் சிலந்தி பூச்சி நோய் தாக்கும் அபாயம் உள்ளது. இதனை கட்டுபடுத்த ஒரு லிட்டர் தண்ணீரில் 200 மிலி அளவு ப்ரோபார்கைட் மருந்தை தெளிக்க உபாசி விஞ்ஞானிகள் அறிவுறுத்தியுள்ளனர். தொடர்மழை காரணமாக வெள்ளைபூண்டு தண்டுகளில் அழுகல் நோய் ஏற்படும் அபாயம் உள்ளதால் 1 லிட்டர் தண்ணீரில் 1 கிராம் காப்பர் ஆக்ஸிகுளோரைடு மருந்தை தெளிக்கவும் அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

**அரிச்சந்திரபுரம் பாசன மதகு சீரமைக்க வேண்டும் விவசாயிகள் வலியுறுத்தல்**

மன்னார்குடி, : அரிச்சந்திரபுரம் பாசன மதகை சீரமைக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர். திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அடுத்துள்ள வடபாதி மங்கலத்தில் வெண்ணாற்றின் கீழ்கரையிலிருந்து அரிச்சந்திரபுரம் பாசன வாய்க்கால் பிரிந்து செல்கிறது. அங்குள்ள பாசன மதகு கடந்த 1954ம் ஆண்டு கட்டப்பட்டது. அந்த பாசன மதகு கடந்த 10 ஆண்டுகளாக சிதிலமடைந்துள்ளது. இதனால் தண்ணீர் பாய்வதில் சிரமம் உள்ளது. அரிச்சந்திரபுரம் பாசன வாய்க்காலை நம்பி அரிச்சந்திரபுரம், கலிமங்கலம், திட்டச்சேரி, மாயனூர், கீழ்கோட்டகம் உள்பட 10க்கும் மேற்பட்டகிராமங்களில் உள்ள விவசாய நிலங்கள்

பயன்பெறுகின்றன. தற்போது ஆகாயத்தாமரை மண்டிகிடக்கிறது. பாசனமதகு உடைந்து புதர்மண்டி விட்டது. 100 நாள் வேலை திட்டத்தில் அவ்வப்போது மண்டிக்கிடக்கும் புதர்களை மட்டும் சுத்தம் செய்து தண்ணீர் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. இதனால் முழுமையான பாசனம் கிடைக்காமல் விவசாயிகள் சிரமம் அடைந்து வருகின்றனர். இதுபற்றி அரிச்சந்திரபுரம் முன்னாள் ஊராட்சி தலைவர் செல்வம், விவசாயி பழனிவேல் ஆகியோர் கூறுகையில், இந்த பாசன மதகை புதிதாக கட்டித்தர வேண்டும் என்று பலமுறை பொதுப்பணித்துறையை அணுகியும் எந்த பலனும் இல்லை. சுமார் 100 ஏக்கர் விவசாய நிலங்கள் இந்த வாய்க்காலை நம்பி உள்ளன. உடனடியாக சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆண்டு தோறும் இந்த பாசன மதகை பொதுப்பணித்துறையிலிருந்து வந்து புகைப்படம் எடுத்து செல்கின்றனரே தவிர, புதிதாக கட்டுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றனர்.

**கால்நடை துறையில் அலுவலக உதவியாளர் பணி**

சிவகங்கை, : சிவகங்கை மாவட்டத்தில் கால்நடை பராமாரிப்புத் துறை சார்பில் இரண்டு அலுவலக உதவியாளர் பணிக்கு பதிவுமூப்பு பரிந்துரை செய்யப்பட உள்ளது. இம்மண்டலத்தில் காலியாக உள்ள இரண்டு அலுவலக உதவியாளர் பதவிக்கு எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். எஸ்.சி அருந்ததியர் முன்னுரிமையுள்ளவர் பெண், ஆதரவற்ற விதவை, எம்.பி.சி பொது முன்னுரிமையுள்ளவர்கள் பரிந்துரை செய்யப்பட உள்ளனர். எஸ்சி வகுப்பினர் 18வயது முதல் 35வயது, எம்பிசி எனில் 18முதல் 32வயதிற்கு மிகாமல் இருத்தல் வேண்டும். தகுதி உடையோர் ஜுன் 12ம் தேதிக்குள் சிவகங்கை, கால்நடை பராமரிப்புத் துறை, மண்டல இணை இயக்குநர் அலுவலகத்திற்கு நேரடியாக வந்து விண்ணப்பத்தினை அளிக்க வேண்டும்.

சிவகங்கை, : சிவகங்கை மாவட்டத்தில் கால்நடை பராமாரிப்புத் துறை சார்பில் இரண்டு அலுவலக உதவியாளர் பணிக்கு பதிவுமூப்பு பரிந்துரை செய்யப்பட உள்ளது. இம்மண்டலத்தில் காலியாக உள்ள இரண்டு அலுவலக உதவியாளர் பதவிக்கு எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். எஸ்.சி அருந்ததியர் முன்னுரிமையுள்ளவர் பெண், ஆதரவற்ற விதவை, எம்.பி.சி பொது முன்னுரிமையுள்ளவர்கள் பரிந்துரை செய்யப்பட உள்ளனர். எஸ்சி வகுப்பினர் 18வயது முதல் 35வயது, எம்பிசி எனில் 18முதல் 32வயதிற்கு மிகாமல் இருத்தல் வேண்டும். தகுதி உடையோர் ஜுன் 12ம் தேதிக்குள் சிவகங்கை, கால்நடை பராமரிப்புத் துறை, மண்டல இணை இயக்குநர் அலுவலகத்திற்கு நேரடியாக வந்து விண்ணப்பத்தினை அளிக்க வேண்டும்.

கிருஷ்ணகிரி, : தென்பெண்ணை ஆற்று நீரை மாவட்டத்திலுள்ள 500க்கும் மேற்பட்ட ஏரிகளுக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் என குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலகத்தில், விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது. கலெக்டர் ராஜேஷ் தலைமை வகித்தார். டிஆர்ஓ பாலசுப்பிரமணியன், வேளாண்மை இணை இயக்குநர் சபாநடேசன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சுமதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில், கடந்த மாதம் விவசாயிகள் வழங்கிய 124 மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விவாதம் நடந்தது.
தொடர்ந்து விவசாயிகள் பேசுகையில், தென்பெண்ணை ஆற்று நீரை மாவட்டத்தில் உள்ள 500க்கும் மேற்பட்ட ஏரிகளுக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும். முதல் போகத்திற்கு நெல் நடவு இயந்திரங்களை பயன்பாட்டிற்கு சரியான வகையில் வழங்க வேண்டும். மாவட்டத்தில் அங்கீகாரம் இல்லாத விதை நாற்று பண்ணைகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். பாம்பாறு அணை கால்வாய்களை சீர்

செய்ய வேண்டும். மலை கிராம விவசாயிகளுக்கு கடன் உதவிகள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மா கொள்முதல் நிலையம், பயிற்சிமையம் தொடங்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினர். இதையடுத்து கலெக்டர் பேசியதாவது: ஜூன் மாதம் முதல் மண் மாதிரிகள் எடுக்கப்படவுள்ளன. இரவையில் 2.50 ஹெக்டேருக்கு ஒரு மண்மாதிரியும், மானாவாரியில் 10 ஹெக்டேருக்கு ஒரு மண் மாதிரியும் எடுக்கப்படும். மாவட்டம் முழுவதும் 36 ஆயிரம் மண் மாதிரிகள் எடுக்கப்படவுள்ளன. அதன்படி, முதல் கட்டமாக இந்தாண்டு 10 ஆயிரம் மண் மாதிரிகள் எடுக்கப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்படவுள்ளது. மண் ஆய்வு விவரங்கள் ஜூலை முதல் வாரத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும். இதன் மூலம் விவசாயிகளுக்கு மண் வள அட்டைகள் வழங்கப்படவுள்ளது. முதல் போகத்திற்கு நெல் நடவு இயந்திரங்களை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அனைத்து கோரிக்கைகளும் பரிசீலனை செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார். இதில், பல்வேறு அரசு துறை அலுவலர்கள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

**கோடைமழையை பயன்படுத்தி மானாவாரி பயிர்கள் சாகுபடி செய்து பயன்பெற ஆலோசனை**

கரூர், : கோடை மழை அதிக அளவு பெய்திருப்பதால் கோடை உழவு செய்யுமாறு விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. கரூர் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழை அளவு 652.2மி மீ. இதில் கோடைப்பருவத்தில் பெய்ய வேண்டிய சராசரி மழை அளவு 109.55. என்றாலும் தற்போது, அதிக அளவாக 226.3மிமீ மழை பெய்துள்ளது. இந்த மழை அனைத்து வட்டாரங்களிலும் கிடைத்துள்ளது. இந்த மழையை பயன்படுத்தி விவசாயிகள் கோடை உழவு செய்ய வேண்டும். கோடை உழவு செய்வதால் மழைநீர் ஓடிவீணாகாமல் அந்த

நிலத்திலேயே சேமிக்கப்படுகிறது. மண் அரிப்பு தடுக்கப்படுகிறது. மண்ணிற்குள் இருக்கும் கூட்டுபுழுக்கள் அழிக்கப்படுகின்றன. மேலும் வரும் தென்மேற்கு, பருவ மழைக்காலத்தில் பெய்யும் மழையைக் கொண்டு மானாவாரி பயிர்களை சாகுபடி செய்து பயனடையலாம். கோடை உழவுப்பணிக்கு வேளாண்மை பொறியியல் துறை, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் வேளாண் கருவிகள் விவசாயிகளுக்கு வாடகைக்கு பெற்றுக்கொள்ளலாம். வேளாண் பொறியியல் துறையில் உழவுஇயந்திரம் வாடகைக்கு மணிக்கு ரூ.340ம், மண் தள்ளும் இயந்திரம் மணிக்கு ரூ.840ம் வசூலிக்கப்படுகிறது. தேவைப்படுமு விவசாயிகள் வாடகைத் தொகையை முன்கூட்டியே செலுத்தி தங்களது பெயரை பதிவு செய்துகொள்ளவேண்டும்.

காரிப் பருவத்திற்கு தேவைப்படும் நெல் விதைகள் 170டன், சிறுதானிய பயிர்விதைகள் 2.5டன், பயறு வகைப்பயிர்களின் விதைகள் 27டன். எண்ணை வித்து விதைகள் 67டன், அளவுக்கு அனைத்து வேளாண் விரிவாக்க மையங்களிலும் இருப்பில் உள்ளது. விதைகள் தேவைப்படும் விவசாயிகள் அந்தந்த வட்டாரத்தில் உள்ள வேளாண் விரிவாக்க மையங்களை அணுகி பயன்பெற வேண்டும் என வேளாண் அலுவலக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரூர், : கோடை மழை அதிக அளவு பெய்திருப்பதால் கோடை உழவு செய்யுமாறு விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. கரூர் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழை அளவு 652.2மி மீ. இதில் கோடைப்பருவத்தில் பெய்ய வேண்டிய சராசரி மழை அளவு 109.55. என்றாலும் தற்போது, அதிக அளவாக 226.3மிமீ மழை பெய்துள்ளது. இந்த மழை அனைத்து வட்டாரங்களிலும் கிடைத்துள்ளது. இந்த மழையை பயன்படுத்தி விவசாயிகள் கோடை உழவு செய்ய வேண்டும். கோடை உழவு செய்வதால் மழைநீர் ஓடிவீணாகாமல் அந்த

நிலத்திலேயே சேமிக்கப்படுகிறது. மண் அரிப்பு தடுக்கப்படுகிறது. மண்ணிற்குள் இருக்கும் கூட்டுபுழுக்கள் அழிக்கப்படுகின்றன. மேலும் வரும் தென்மேற்கு, பருவ மழைக்காலத்தில் பெய்யும் மழையைக் கொண்டு மானாவாரி பயிர்களை சாகுபடி செய்து பயனடையலாம். கோடை உழவுப்பணிக்கு வேளாண்மை பொறியியல் துறை, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் வேளாண் கருவிகள் விவசாயிகளுக்கு வாடகைக்கு பெற்றுக்கொள்ளலாம். வேளாண் பொறியியல் துறையில் உழவுஇயந்திரம் வாடகைக்கு மணிக்கு ரூ.340ம், மண் தள்ளும் இயந்திரம் மணிக்கு ரூ.840ம் வசூலிக்கப்படுகிறது. தேவைப்படுமு விவசாயிகள் வாடகைத் தொகையை முன்கூட்டியே செலுத்தி தங்களது பெயரை பதிவு செய்துகொள்ளவேண்டும்.

காரிப் பருவத்திற்கு தேவைப்படும் நெல் விதைகள் 170டன், சிறுதானிய பயிர்விதைகள் 2.5டன், பயறு வகைப்பயிர்களின் விதைகள் 27டன். எண்ணை வித்து விதைகள் 67டன், அளவுக்கு அனைத்து வேளாண் விரிவாக்க மையங்களிலும் இருப்பில் உள்ளது. விதைகள் தேவைப்படும் விவசாயிகள் அந்தந்த வட்டாரத்தில் உள்ள வேளாண் விரிவாக்க மையங்களை அணுகி பயன்பெற வேண்டும் என வேளாண் அலுவலக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணராயபுரம், : கிருஷ்ணராயபுரம் சுற்றுவட்டார பகுதிகளில் வெளுத்து வாங்கிய கோடை மழையால், நீர் நிலைகளில் நீர்நிரம்பி உள்ளது. மேலும், கோடை மழையை பயன்படுத்தி சாகுபடி செய்ய நிலங்களை தயார்படுத்தும் பணியில் விவசாயிகள் ஈடுப்பட்டுள்ளனர். கிருஷ்ணராயபுரம் பகுதிகளில் அக்னி வெயிலின் வாட்டத்தால் கடந்த சில தினங்களாக பொதுமக்கள் மிகவும் சிரமப்பட்டு வந்தனர். இந்நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு கருமேகங்கள் சூழ்ந்து சூறாவளி காற்றுடன் கோடை மழை 2 மணிநேரம் வெளுத்து வாங்கியது.

கிருஷ்ணராயபுரம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளான திருக்காம்புலியூர், மேட்டுதிருக்காம்புலியூர், மாயனூர், மணவாசி, சேங்கல், வீராக்கியம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் கோடைமழை பெய்தது. கோடை மழையால் கிணறு மற்றும் நீர்நிலைகளில் ஓரளவு தண்ணீர் தேங்கி உள்ளது. கோடை மழையை பயன்படுத்தி மானாவாரி விவசாயிகள் எள், கம்பு, சோளம், உளுந்து ஆகிய பயிர்களை சாகுபடி செய்ய விவசாயிகள் தங்களது நிலங்களை தயார்படுத்தும் பணியில் ஈடுப்பட்டுள்ளனர். இந்தாண்டு கோடையில் தொடர்ந்து இரண்டு முறை நல்லமழை பெய்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**விவசாயிகளுக்கு வேளாண் கருவி**

ஆலங்குடி, : ஆலங்குடி வேளாண் அலுவலகத்தில் தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு வேளாண் கருவிகள் வழங்கப்பட்டன.

இதையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சிக்கு திருவரங்குளம் வட்டார வேளாண் உதவி இயக்குநர் அன்பரசன் தலைமை வகித்தார். மத்திய வேளாண் திட்ட அலுவலர் ஜெகதீஸ்வரி, தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்ட ஆலோசகர் திருப்பதி, அட்மா திட்ட ஆலோசனைக் குழுத் தலைவர் தினகரசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாண் இணை இயக்குநர் சதானந்தம், விவசாயிகள் 5 பேருக்கு தலா ரூ.10ஆயிரம் மானியத்தில் மின் மோட்டார்கள் மற்றும் ரூ.4 ஆயிரம் மானியத்தில் விசைத் தெளிப்பான்கள் ஆகியவற்றை வழங்கினார். இதற்கான ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் கவிதா, மகேஸ்வரி, அட்மா தொழில்நுட்ப மேலாளர் மகேந்திரன், உதவித் தொழில்நுட்ப மேலாளர்கள் முருகன், பிரேமா ஆகியோர் செய்திருந்தனர். முன்னதாக, கணேசன் வரவேற்றார். முடிவில் துணை வேளாண் அலுவலர் ரமேஷ் நன்றி கூறினார்.

**நெல் உள்ளிட்ட பயிர்களில் திரவ நுண்ணுயிர் உரங்களை பயன்படுத்த வேண்டும் வேளாண் துறை பரிந்துரை**

பொன்னமராவதி, : நெல் மற்றும் அனைத்துப் பயிர்களிலும் திரவ நுண்ணுயிர் உரங்களைப் பயன்படுத்தினால் செலவு மிச்சம் என்று வேளாண் துறை யோசனை தெரிவித்துள்ளது. எனவே, திரவ நுண்ணுயிர் உரங்களை பயன்படுத்த விவசாயிகள் முன்வருமாறு பொன்னமராவதி வட்டார வேளாண் உதவி இயக்குநர் ஜெயபாலன் வேண்டுகோள் விடுத்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

பயிர் சாகுபடியில் இடுபொருள் செலவில் அதிக இடத்தை பிடித்திருப்பது ரசாயன உரங்களுக்கான செலவு தான். தற்போது உரங்களின் விலையும் அதிகரித்துவிட்ட நிலையில் உரத் தேவையை குறைத்து கூடுதல் மகசூல் பெற நமக்கு கிடைத்துள்ள அரிய தொழில் நுட்பம்தான் திரவ நுண்ணுயிர் உரங்களின் பயன்பாடு ஆகும். அதன்படி, தழைச்சத்து மற்றம் மணிச்சத்து உரத்தேவையை கணிசமான அளவு குறைக்க கூடியவை திரவ நுண்ணுயிர் உரங்களான அசோஸ் பைரில்லம், ரைசோபியம் மற்றும் பாஸ்போபாக்டீரியா உயிர் உரங்களாகும். திரவ நுண்ணுயிர் உரங்கள் நெல், சிறுதானிய பயிர்கள், நிலக்கடலை மற்றும் பயறுவகை பயிர்களுக்கு என தனித்தனியாக உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வேளாண்மை விரிவாக்க மையம் மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

நெற் பயிருக்கு அசோஸ் பைரில்லம்(நெல்) மற்றும் பாஸ்போ பாக்டீரியா என இரு வகை திரவ நுண்ணுயிர் உரங்களைப் பயன்படுத்த வேண்டும். இவற்றை விதை நேர்த்தி முறையில் 10 மிலி வீதமும், நாற்றின் வேர்களை நனைத்து 100 மிலி வீதமும், நடவு வயலில் நேரடியாக இடுவதற்கு ஒரு ஏக்கருக்கு 200 மிலி வரையும் பயன்படுத்த வேண்டம். சிறுதானிய பயிர்களுக்கு விதை நேர்த்தியாக 10 மிலி மற்றும் விதைக்கும் முன் நேரடியாக 200 மிலி வீதம் வயலில் இட பயன்படுத்த வேண்டும். பயறு வகை பயிர்கள் மற்றும் நிலக்கடலை பயிர்களுக்கு ரைசோபியம் மற்றும்

பாஸ்போ பாக்டீரியா திரவ நுண்ணுயிர் உரங்களை விதை நேர்த்திக்கு 10 மிலி மற்றும் நேரடி விதைப்புக்கு 200 மிலி வீதம் பயன்படுத்த வேண்டும். இதேபோல, காய்கறி பயிர்களுக்கும் அசோஸ் பைரில்லம் (இதர வகை) மற்றும் பாஸ்போபாக்டீரியா ஆகிய திரவ நுண்ணுயிர் உரங்களை பயன்படுத்தலாம். எனவே, பொன்னமராவதி வட்டார விவசாயிகள் அனைவரும் தாங்கள் சாகுபடி செய்யும் அனைத்துப் பயிர்களுக்கும் திரவ நுண்ணுயிர் உரங்களை வேளாண் விரிவாக்க மையத்தில் வாங்கி பயன்படுத்தி உரச்செலவை குறைத்து கூடுதல் வருமானம் பெற வேண்டும்.

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கேட்டுக்கொண்டுள்ளார்.

**நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் சிறுதானிய விதைகள் மானியத்தில் விநியோகம்**

புதுக்கோட்டை, : புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் குறை தீர் நாள் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதற்குத் தலைமை வகித்து கலெக்டர் கணேஷ் பேசியதாவது: 2014 15ம் ஆண்டு முடிய நெல் 67239 எக்டேர் பரப்பளவிலும், சிறுதானியங்கள் 6400 எக்டேர் பரப்பளவிலும், பயறுவகைப் பயிர்கள் 5417 எக்டேர் பரப்பளவிலும், கரும்பு 2700 எக்டேர் பரப்பளவிலும், எண்ணெய்வித்து பயிர்கள் 6967 எக்டேர் பரப்பளவிலும், பருத்தி 14 எக்டேர் பரப்பளவிலும் மற்றும் தென்னை 8189 எக்டேர் பரப்பளவிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும் 20.5.15 முடிய நெல் 375 எக்டேர் பரப்பளவிலும், சிறுதானியங்கள் 463 எக்டேர் பரபரப்பளவிலும், பயறுவகை பயிர்கள் 215 எக்டேர் பரபரப்பளவிலும், எண்ணெய் வித்து 341 எக்டேர் பரப்பிலும், கரும்பு 219 எக்டேர் பரப்பிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மாவட்டத்தில் உள்ள 33 வேளாண் விரிவாக்க மையங்களில் 68.13 மெடன் நெல் விதைகளும், 9.9 மெ.டன் பயறு விதைகளும் நிலக்கடலை 45.42 மெ.டன் தற்சமயம் இருப்பில் உள்ளன. விவசாயிகள் தரமான சான்று பெற்ற விதைகளை வேளாண் விரிவாக்க மையங்களில் இருந்து

பெற்று சாகுபடி செய்து பயனடையலாம்.

உரிமம் பெற்ற கூட்டுறவு மற்றும் தனியார் விற்பனை மையங்களிலும் சான்று பெற்ற விதைகள் கிடைக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு தேவையான தரமான உரங்கள் தடையின்றி உரிய நேரத்தில் கிடைக்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. யூரியா உரங்கள் தட்டுபாடின்றி கிடைப்பதற்கு மாவட்ட நிர்வாகத்தின் அறிவுரைக்கேற்ப வேளாண்மை துறை மற்றுமு; கூட்டுறவு துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்போது யூரியா 1540 மெ.டன்னும், டிஏபி 848 மெ.டன்னும், யூரியா 869 மெ.டன்னும், பொட்டாஷ் 1312 மெ.டன்னும், 713 மெ. டன் காம்ப்ளக்ஸ் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இம்மாவட்டத்தில் தறபோது பரவலாகப் பெய்துவரும் கோடை மழையைப் பயன்படுத்தி தரிசாக கிடக்கும் நிலங்களை உழவுச் செய்து பயன்பெற வேண்டும். மேலும் குருவை சாகுபடிக்கு முன்னதாக தற்போது பெய்து வரும் மழையைப் பயன்படுத்தி சணப்பு அல்லது தக்கைப் பூண்டு போன்ற பசுந்தாள் உரமிட்டு பயிரிட வேண்டும். இதே போல், குறைந்த அளவில் தண்ணீர் தேவைப்படும் மக்காச்சோளத்தை அதிக அளவில் பயிரிட்டு பயன்ெபற வேண்டும்.

மேலும், சிறுதானிய பயிர்களான கேழ்வரகு, கம்பு, சோளம், சாமை மற்றும் குதிரைவாலி விதைகள் போதுமான அளவு வட்டார வேளாண் விரிவாக்க மையங்ளில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் சிறுதானிய விதைகள் மானியத்தில் வழங்கப்பட்டு வருகின்றன என்றார். இக்கூட்டத்தில் டிஆர்ஓ மாரிமுத்து, மற்றும் வேளாண்மை துறை அலுவலர் உள்பட அனைத்துத் துறை அலுவலர்கள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். மழை அளவு

புதுக்கோட்டை மாவட்டத்தில் மழையளவைப் பொருத்தவரை 2014ம் ஆண்டில் இயல்பான மழை அளவான 925.92 மி.மீ.க்கு பதிலாக 751.03 மி.மீ. மழையளவு பெறப்பட்டுள்ளது. மே மாதத்தில் பெறவேண்டிய இயல்பான மழை அளவான 60.39 மிமீருக்கு இதுவரை 110.80 மிமீ கிடைக்கப் பெற்றுள்ளது. 2015 ஆண்டுக்கு இம்மாதம் முடிய பெறவேண்டிய இயல்பான மழையளவு 119.93 மி.மீ.க்கு இது வரை 215.61 மி.மீ. மழை பெறப்பட்டுள்ளது

**வேதாரண்யம் அருகே பயிர்காப்பீட்டு தொகை வழங்கல்**

வேதாரண்யம், : வேதாரண்யம் அருகே வேளாண்மை கூட்டுறவு வங்கி மூலம் 752 விவசாயிகளுக்கு ரூ.1.32 கோடியில் பயிர் காப்பீட்டு தொகையை எம்எல்ஏ காமராஜ் வழங்கினார்.நாகை மாவட்டம் வேதாரண்யம் அடுத்த அண்டர்காடு தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் 201314ம் ஆண்டிற்கான பயிர்காப்பீடு தொகை வழங்கும் நிகழ்ச்சி ஆதனூர் ஊராட்சி தலைவர் மனோகரன் தலைமையில் நடைபெற்றது. சங்க தலைவர் சண்முகவேல் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் எம்எல்ஏ காமராஜ் கலந்து கொண்டு 752 பயனாளிகளுக்கு ஒரு கோடியே 32 லட்சத்திற்கான பயிர்காப்பீட்டு தொகையை வழங்கினார். நிகழ்ச்சியில் வேதாரண்யம் நிலவள வங்கி தலைவர் சிவானந்தம் மற்றும் இயக்குனர்கள் சங்க செயலர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**கோடை வெப்பம் கொளுத்துவதால் இளநீர் விற்பனை ஜோர்**

கம்பம், : கோடை வெயில் கொளுத்துவதால் கம்பம் பகுதியில் மீண்டும் இளநீர் விற்பனை அதிகரித்துள்ளது. கம்பம் பகுதியில் அதிகமான தென்னை மரங்கள் உள்ளன. இதில் விளையும் தேங்காய் அதிகளவில் சென்னை உள்பட வெளி மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இதில் இளநீர் அதிகளவில் வெட்டி கோடைவெயிலின் தாக்கத்தை தீர்ப்பதற்கு விற்பனைக்கு வருகிறது. கோடைவெயில் கொளுத்தியபோது

மழை கொட்டியதால் இளநீர் விற்பனை குறைந்தது. இதனால் இதன் வியாபாரிகள் அதிர்ச்சியடைந்தனர். இந்நிலையில் தற்போது கோடை வெப்பம் மீண்டும் கொளுத்துகிறது. இதனால் தென்னை விவசாயிகளிடம் இருந்து இளநீரை கொள்முதல் செய்வதில் வியாபாரிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.

சீசன் முடிந்தாலும் வெப்பத்திற்கு இளைப்பாறவும், திருமண விசேஷ காரியங்களுக்கு வருபவர்கள் சாலைகளின் ஓரமாக விற்பனை செய்யப்படக்கூடிய இளநீரை வாங்கி குடிப்பதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.இதனால் மீண்டும் இளநீர் சீசன் களை கட்டத்தொடங்கி உள்ளது.வியாபாரி சந்தானம் கூறுகையில், 'கோடைக்காலம் முடியப்போகிறது. நன்றாக வெப்பம் கொளுத்தும்போது மழை பெய்ததால் இளநீர் விற்பனை குறைந்தது. ஆனால் இப்போதோ மீண்டும் வெப்பம் கொளுத்துவதால் இதனை வாங்கிட அதிக ஆர்வம் மக்களிடையே உண்டாகி உள்ளது' என்றனர்.

காட்டேரி பூங்காவில் சிறப்பு கண்காட்சி நடத்த திட்டம்

குன்னூர், : காட்டேரி பூங்காவில் பழங்குடியினர் கைவினைப் பொருட்களை கொண்டு சிறப்பு கண்காட்சி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

குன்னூர் பகுதியில் முக்கிய சுற்றுலா தலமான சிம்ஸ்பூங்கா உள்ளது. இதனையடுத்து, இயற்கை காட்சி முனைகளான லேம்ஸ்ராக், டால்பின்நோஸ், ஆகிய சுற்றுலா தலங்களும் உள்ளன. கடந்த 2011ம் ஆண்டு தொடங்கப்பட்ட காட்டேரி பூங்காவிற்கு அதிகளவில் சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். குன்னூர்மேட்டுப்பாளையம் இடையே அமைக்கப்பட்டுள்ள இந்த பூங்கா சுற்றுலா பயணிகள் ஓய்வு எடுப்பதற்காகவும், பசுமையான இயற்கை சூழலை அனுபவிக்கவும் அமைக்கப்பட்டுள்ளது. இப்பூங்காவில் வெவ்வேறு வகையான மலர் செடிகள், அழகிய புல்வெளி, சிறுவர் விளையாட்டு உபகரணங்கள்

உள்ளன.

ஆண்டுதோறும் கோடை விழாவின் இறுதி நிகழ்ச்சியாக சிம்ஸ்பூங்காவில் பழக்கண்காட்சியை தோட்டக்கலை துறையினர் நடத்தி வருகினர். இதேபால் காட்டேரி பூங்காவில் சிறப்பு கண்காட்சி நடத்தப்பட்டால் பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் அதிகளவில் வரகூடும் என சுற்றுலா ஆர்வலர்கள் வலியுறுத்தி வந்தனர்.

இதுகுறித்து மாவட்ட தோட்டக்கலை துறை இணை இயக்குநர் மணி கூறுகையில், 'காட்டேரி பூங்காவை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பூங்காவிற்கு சுற்றுலா பயணிகளின் கவனத்தை ஈர்ப்பதற்காக கண்காட்சி நடத்த வேண்டும் எனற் கோரிக்கை இருந்து வருகிறது. எனவே இஙகு கோடை விழா காலங்களில் பழங்குடியின மக்களின் கைவினை பொருட்களை கொண்டு கண்காட்சி நடத்துவது குறித்து ஆலோசனை நடத்தப்படுகிறது', என்றார்.

**ஜெயங்கொண்டத்தில் 249 கால்நடைகளுக்கு இலவச சிகிச்சை**

ஜெயங்கொண்டம், : ஜெயங்கொண்டம் பகுதியில் வசிக்கும் 100 பேருக்கு இலவச வீட்டுமனைப்பட்டாக்களை அரியலூர் டிஆர்ஓ வழங்கினார். ஜெயங்கொண்டம் தாலுகாவில் தா.பழூர், குவாகம், சுத்தமல்லி, ஜெயங்கொண்டம் ஆகிய குறுவட்ட பகுதிகளில் உள்ள பயணாளிகள் 100 பேருக்கு இலவச வீட்டு மனைப்பட்டா வழங்கும் முகாம் ஜெயங்கொண்டம் தாலுகா அலவலகத்தில் நடைபெற்றது. முகாமில் அரியலூர் மாவட்ட டிஆர்ஓ ரவீந்திரன் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு குடிமனை, வீட்டுமனை பட்டாக்களை வழங்கினார். நிகழ்ச்சியில் ஜெயங்கொண்டம் தாசில்தார் ஸ்ரீதர், துனைத்தாசில்தார்கள் கோவிந்தராஜ், செந்தில்குமார், வருவாய் ஆய்வாளர் சம்பத் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**வேளாளர் சங்க கூட்டம்**

திருவிடைமருதூர், : திருவிடைமருதூர் மற்றும் கும்பகோணம் பகுதிகளுக்கு உட்பட்ட தமிழ்நாடு வேளாளர் சங்கங்களின் கூட்டமைப்பு ஆண்டு விழா, கூட்டம் நேற்று நடந்தது. மாநில தலைவர் ஜெயபால், மாநில பொது செயலாளர் கோவிந்தராஜன் தலைமை வகித்தனர். மாநில பொருப்பாளர்கள் ஜெகதீசன், முத்துகுமரன், மணிமேகலை முன்னிலை வகித்தனர். மாவட்ட செயலாளர் கணேசன் வரவேற்றார். கூட்டத்தில் கோடை மழையால் பாதித்த பருத்தி, எள், உளுந்து பயிர்களை கணக்கிட்டு நிவாரணம் வழங்க வேண் டும். தனியார் சர்க்கரை ஆலைகள் கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய கோடிக்கணக்கான நிலுவைதொகையை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. விழாவில் கூட்டமைப்பு செயலாளர் சூரியகுமார், புலவர் ஞானசுந்தரம், நகர தலைவர் பழநியாப்பிள்ளை, தலைமை கழக பேச்சாளர் துரைமணிமொழி, பொருப்பாளர்கள் மாணிக்கவெங்கடேஷ், சவுந்தராஜன், வசந்தா, கலைச்செல்வி, சியாமாலா கலந்து கொண்டனர். நகர செயலாளர் செல்வராஜ் நன்றி கூறினார்.

**தக்காளி விலை தடாலடி உயர்வு**

மதுரை, : மதுரை, மாட்டுத்தாவணி மார்க்கெட்டில், கடந்த சில தினங்களாக குறைவான விலைக்கு விற்பனையான தக்காளி தற்போது விலை உயர்ந்துள்ளதால் இல்லத்தரசிகள் கவலையடைந்துள்ளனர்.ஏழைகளின் ஆப்பிள், தங்கம் என வர்ணிக்கப்படும் தக்காளியை வாங்கி ரசம் வைத்துக்கொள்வோம் என்பதுதான் இவர்களின் மனநிலை. அன்றாட சாப்பிட்டிற்கு அவசியமான தக்காளியின் கிடு, கிடு விலை உயர்வு இல்லத்தரசிகள் வயிற்றில் புளியை கரைத்துள்ளது. இதுகுறித்து காய்கறி வியாபாரிகள் சங்க தலைவர் முருகன் கூறியதாவது: சில தினங்களுக்கு முன்பு கிலோ ரூ.15க்கும் குறைவாக விற்பனையான தக்காளி விலை உயர்ந்து, ரூ.35 முதல் ரூ.40 வரை

விற்பனையாகிறது. தேனி மாவட்டத்தில் இருந்துதான் பெரும்பாலும் தக்காளி மாட்டுத்தாவணி மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு வருகிறது. தற்போது மழை பெய்துள்ளதாலும், வரத்து குறைவு என்பதாலும் தக்காளி விலை உயர்ந்துள்ளது. தொடர் முகூர்த்தங்கள் வருவதால் தக்காளி விலை குறைய வாய்ப்பு இல்லை' என்றார்.